டாக்டர் கு. திருமாவளவன்,
(தமிழ்ப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
8, இரண்டாவது நெடுஞ்சாலை,
கோட்டூர்க் கோட்டம்.

# எழுத்து

# 100

வல்லிக்கண்ணன்
கம்பதாசன்
சி. கனகசபாபதி
ந. முத்துசாமி

ஏ. கே. ராமானுஜன்
எஸ். வைதீஸ்வரன்
கி. அ. சச்சிதானந்தம்
ஹரி சீனிவாசன்

பூ. மாணிக்கவாசகம்
டெஹல்வி

3a

ஆசிரியர்:
சி. சு. செல்லப்பா

ஏப்ரல் 67
பைசா 50

# எழுத்து

ஆசிரியர்: சி. சு. செல்லப்பா

ஒன்பதாம் ஆண்டு ஏடு 100 ஏப்ரல் 1967


தலையங்கம்
100 1

டெஹல்வி
டெல்லி கடிதம் 2

ஏ. கே. ராமானுஜன்
மூன்று கவிதைகள் 3

ந. முத்துசாமி
நமது சந்ததிகள் 4

கி. அ. சச்சிதானந்தம்
விடிவு 7

எஸ். வைதீஸ்வரன்
பார்வை 8

கவட்டாக்கி மொக்வாமி
திருடர்கள் (ஓரங்க நாடகம்) 9

பூ. மாணிக்கவாசகம்
மழைக் கொடை 12

சி கனகசபாபதி
புதுக் கவிதை – உருவ ஆய்வு 14

வல்லிக்கண்ணன்
வெள்ளம் 16

கம்பதாசன்
முதலில்லா வியாபாரம் 17

ஹரி சீனிவாசன்
தேட்டம் 19

வல்லிக்கண்ணன்
படைப்பாளர் பிரச்னைகள் 20

குறிப்புகள்
இலக்கிய கூட்டங்கள் 21


⊙


எழுத்து—ஏப்ரல் 1967 : ஏடு 100 : ஒன்பதாம் ஆண்டு.

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம் : எழுத்து, 19—A, பிள்ளையார்கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

சந்தாவிகிதம் : தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ. 6/- மூன்று ஆண்டுகள் ரூ. 15/- வெளிநாடு : ஆண்டுக்கு ரூ. 8/– மூன்று ஆண்டுகள் ரூ. 20/-

இலக்கிய, கலைக் கட்டுரைகளை வெளியிடும் : கட்டுரைகளுடன் ஸ்டாம்பு ஒட்டிய, தன் விலாசமிட்ட கவர்கள் அனுப்பப்பட வேண்டும். சுருக்கமாக எழுதப்பட்ட கடிதங்கள் கருத்துகள், எழுத்து அரங்கம் பகுதியில் வெளியிடப்படும்.

கடிதப் போக்கு வரத்து, கட்டுரை அனுப்புதல் : மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

# எழுத்து

| ஆண்டு | ஏப்ரல் | ஏடு |
|---|---|---|
| 9 | 1967 | 100 |


தலையங்கம்

# 100

நூறு ரன்கள் ஒரு சென்சரி; நூறு பாட்டுப் பிரபந்தம் ஒரு சதகம்; நூறாண்டு வாழ்ந்தவன் சதஞ்சீவி. எழுத்து இந்த ஏட்டோடு சென்சரி போட்டு, சதகமாக உருவாகி சதஞ்சீவியாகி விட்டது.

ஒரு இலக்கிய பத்திரிகைக்கு — அதுவும் எழுத்து போன்ற ஒரு நூற்றுக்கு நூறு சுத்த இலக்கிய சின்னப் பத்திரிகைக்கு — நூறு ஏடுகள் விரிந்த நூறு மாதங்கள் — மாதங்கள் இல்லை — நூறு ஆண்டுகள்.

ஏன், கற்பனையை அதீதமாக வீசிவிட்டால் நூறு ஜன்மங்கள் என்று கூடச் சொல்லலாம்.

ஜன்மங்கள் என்கிறபோது 'பஞ்சாமிர்தம்', 'பால பாரதி' முதல் 'இலக்கிய வட்டம்' வரை நடந்து மறைந்த அத்தனை சின்னப் பத்திரிகைகளின் ஞாபகம் வருகிறது. இவை அத்தனையிலும் ரொம்ப பெரும்பாலானவை இதழ் பரப்பிய நாட்களுக்கெல்லாம் மீட்டாக எழுத்து ஏடு விரித்து சாதனை காட்டி இருக்கிறது.

தமிழுக்கு, தற்கால இலக்கியத்துக்கு, இன்றய ரசனைப் பெருக்கத்துக்கு எழுத்து தன் அணில் பங்கை செய்ய முடிந்திருக்கிற இந்த நூறுமாத காலம் 'மணிக்கொடி காலம்' என்ற முப்பதுக்கள் கால இலக்கியச் சூழ்நிலையை இன்று நாம் கணிக்க சாத்யமாகி இருப்பதுபோல சுமார் கால் நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பின், 'எழுத்து சூழ்நிலை' என்று பெயர் உண்டாக்கிய அறுபதுக்கள் கால நாட்கள்.

இந்த பெருமையை தலையங்கத்தில் குறிப்பிட்டால் தற்பெருமை தொனியாக படக்கூடும் சாதனையை மிகைபடுத்திக் கூறுவதாகக்கூட. ஆனால் எழுத்துவின் 'முதல் அத்தியாய' கருத்தில்லை இது.

Ezhutthu and Chellappa tend to make of new verse a coterie and a camp. Best of the attempts at newverse were published by Chellappa in Ezhutthu. He tries to import into Tamil literary criticism the analytical methods of textual criticism popular now in United States.

என்றெல்லாம் புதுக் கவிதை, ஆய்வு விமர்சனம் பற்றி க. நா. சு. கோஷ்டி, தனித் தொனி, சாதனைபற்றி குறிப்பிட்டிருக்கிறார். எழுத்து செல்வாக்கை காட்டுவது தானே இது.

'தீபம்' பேட்டிகளில் எல்லாம் புதுக் கவிதை, விமர்சனம் பற்றி கேள்வி இல்லாமல் இருக்காது. 'புதுக் கவிதை என்று நீங்கள் குறிப்பிடுவது சி. சு. செல்லப்பா வகையறுக்கள் வரிந்து கட்டிக்கொண்டுசெய்துவரும்முயற்சிகளைத்தானே' என்று கோஷ்டி இனம் பிரித்து சாடுகிறார் சிதம்பர ரகுநாதன் அவரை ஒட்டி அழகிரிசாமியும் ஜயகாந்தனும். நா பார்த்தசாரதி ஒரு கட்டுரையில் கிண்டல் செய்திருக்கிறார். பெ. தூரன். லா ச. ராமாமிருதம், தி ஜானகிராமன் அதை அநுமதித்து வரவேற்றிருக்கிறார்கள் எழுத்து பாதிப்பு தானே இவை.

'தீபம்' பேட்டிக் கேள்விகளோடு நின்றுவிட, 'தாமரை' புதுக் கவிதை பற்றி விவாதத்துக்கு களம் ஏற்படுத்தி விட்டது. புதுக் கவிதையின் சாதனையை குறைத்து மதிப்பிட்டாலும் புதுமைக்காகவாவது வரவேற்கும் மா. பா. குருசாமி, 'புதுக் கவிதைத் துறைக்கு ஒரு கம்பர், ஒரு சடையப்பர்' என்று இடக்காக எழுதி சாடும் வை ரங்கநாதன், 'இந்நாளில் கவிதையை புதுக்க விதையொன்று வேர்விட்டிருக்கிறது. புதுக்கவிதை அதன் பேர்' என்று புதுக் கவிதைக்கு கட்சி கட்டும் ஹரி சீனிவாசன் ஆகியோரது கட்டுரைகளும் எழுத்துச் சூழ்நிலையை காட்டுபவை தானே ?

ஆய்வு விமர்சனத்தை 'வார்த்தைப் பந்தல்'

(பின் பக்கம் பார்க்க)

# டெல்லி கடிதம்

## ஹிந்தி நாடகம்

சென்ற மாதம் டில்லி தேசிய நாடகமன்றம் (நேஷனல் ஸ்கூல் ஆஃப் டிராமா) ஹிந்தி சிறுகதை ஆசிரியரான மோகன் ராகேஷ்-என்பவரின் இரண்டாவது நாடகமான 'அலைகளின் அன்ன பட்சி' என்றஹிந்திநாடகத்தைமேடையேற்றியது இந்த நாடகம் அசுவசோஷின் காவியமான் 'சௌந்திர நந்தன் நந்தன் (புத்தரின் இளைய சகோதரன்) சுந்தரி என்ற பாத்திரங்களை வைத்துக்கொண்டு மூன்று அங்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

கதை இது தான். ஒரு புறம் தன் அன்பு மனைவி சுந்தரியின் பிணைப்பு, மறுபுறம் புத்த தேவனின் சலனமற்ற காந்தத்தின் தெய்வீக ஆகர்ஷணம் ஆகிய இருவித பிணைப்புகளின் இடையே அகப்பட்டு அலைபடுபவன் நந்தன். சுந்தரியின் அன்பு ஆக்ரமிப்பு பாவம் கொண்டது. அதற்கு கட்டுப்படுவதிலேயே வாழ்வின் அர்த்தம் அடங்கிக் கிடக்கலாம் என்று சுந்தரியுடன் இருக்கும் போது அவனுக்குத் தோன்றும். புத்ததேவன் சந்நிதானத்தில்தான், பற்றற்ற ஒதுங்கலில் தான் வாழ்க்கையின் அர்த்தம் உள்ளதோ என்று பிக்ஷுக்களின் நினைவு வரும்போதும்'' அவர்களை காணும் போதும் மந்திரங்கள் காதில் விழும் போதும் தோன்றும். புத்தன் பிக்ஷைக்காக தன் வீட்டின் முன் காத்திருந்து. சென்று விட்டார் எனத் தெரிந்ததும் அவரைப் பின் தொடர்ந்த நந்தன் பிக்ஷுவாக திரும்பி வருகிறான் அவன் பழைய நந்தன் இல்லை என்று சுந்தரி அவனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். காவி அணிந்து விட்டதாலேயே தான் அழிந்து விட்டதாக நந்தன் நம்பவில்லை. தானும் தன் அல்லல்களும் மாறாத நந்தனாகவே தன்னைக் காண்கிறான். வாழ்க்கை அதன் பூரணத்வத்தில் சுந்தரியிடமும் இல்லை. தீட்சை பெற்ற பிக்ஷுவிடமும் இல்லை. ஒன்று வாழ்க்கையின் ஒரு அம்சத்தில் உண்மையின் ஒரு பகுதியில் ஆழ்ந்து விடுவது, மற்றது அந்த அம்சத்திலிருந்து தப்பியோடுவது என்று அவனுக்குத் தோன்றுகிறது அவன் பிரச்னை தத்தளிப்பு முடிவு பெறுவதில்லை.

இந்த இரண்டு மணி நேர நாடகத்தில் சம்பவங்கள், கதை என்று ஏதும் கிடையாது. ஒரு பாத்திரத்தின் ஜீவனின் அல்லல்படல் ஆனாலும் சலிப்புத் தட்டும் ஒரு கணம் கூட கிடையாது. மூன்று அங்கங்களிலும் களம் ஒன்றுதான். முதல் இரண்டு அங்கங்களில் நந்தன்—சுந்தரி உரையாடல். மூன்றாவதில் நந்தன், கூட வந்த பிக்ஷு; சுந்தரி உரையாடல். உரையாடல் மூலமே குணச் சித்திரமும், மனப் போராட்டமும் தெரிய வருகிறது. தில்லியின் சிறந்த நடிகர் ஓம் ஷிவபூரி (நந்தன்) சுதா ஷர்மா (சுந்தரி) ஆர் ஜி. பஜாஜ் (ஷ்வேதேவ்) ஆகியோர் அடக்கமான நடிப்பில் உக்ரத்தை காண முடியும் என்று காட்டும்படியாக நடித்தார்கள். சிறந்த நாடக டைரக்டர் இப்ராஹீம் அல்காஷி எளிமை, அழகு, சிக்கனம் மூன்றுக்கும் உதாரணமாக ஒரே செட்டில் அமைத்துக் கொடுத்திருந்தார். இரண்டு மணி நேர ஆழ்ந்த அனுபவமாக இருந்தது இந்தநாடகம்.

## கவிதை படித்த ஜர்மன் கவி

டில்லி மாக்ஸ்முல்லர் பவன் நடத்திய தொடர் கருத்தரங்கில் குறிப்பிடத்தக்க இரண்டு நிகழ்ச்சிகள் ஜெர்மன் கவி ஹன்ஸ் மாக்னஸ் என்ஸென்ஸ்பர்கர் தன் கவிதைகளை படித்தது, ராபர்ட் ம்யூசில் என்ற ஜெர்மன் நாவலாசிரியரைப்பற்றி டாக்டர் சிட்ரன் தாமஸ் பேசியது. முப்பத்தெட்டு வயதான என்ஸென்ஸ்பர்கர் 47 குழுவை சேர்ந்தவராம். 47 குழு ஒரு எழுத்தாளரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டுக்கு ஒரு முறையோ இரண்டு முறையோ முப்பது நாற்பது எழுத்தாளர்கள் கூடி, இதுவரை பிரசுரமாகாத தங்கள் கையெழுத்துப் பிரதிகளை வாசிப்பார்களாம். அவை விமர்சிக்கப்படும். ஆனால் ஒரு விதி. விமர்சனங்களுக்கு படைப்பாளி பதில் சொல்லக் கூடாது ஒரு முறை என்ஸென்ஸ்பர்க்கரே தன் நாடகத்தை படிக்க ஆரம்பித்து சில வரிகளுக்குப் பின் தனக்கே நாடகம் சரியில்லை எனப்படவே மேலே படிக்காமல் எறிந்து விட்டாராம். அவர் கவிதைகளில் விடம்பனமும் (ஐரனி) கோபமும் சிறப்பாக இருக்கும்.

## ஜர்மன் நாவலாசிரியர்

ராபர்ட் ம்யூசிலை டாக்டர் சிட்ரன் அறிமுகப்படுத்தியதிலிருந்து காப்காவுக்குப் பிறகு ஒரு சிறந்த இலக்கிய மேதை என்று தோன்றுகிறது 'குணங்களற்ற மனிதன்' என்ற முடிவுறாத நாவலை அவர் திரும்பத் திரும்ப மாற்றி திருத்தி எழுதிக்கொண்டே இருந்ததால் நாவல் முடிவு பெறவே இல்லை. 1600 பக்கங்கள் கொண்ட அந்த முடிவு பெறாத நாவல் பல பதிப்புகள் வெளியாகி இருக்கிறது. —டெஹல்வி

---

(தலையங்கம் தொடர்ச்சி)

என்றும் ரசாபாசமானது என்றும், பூவை பிய்த்து மோந்து பார்ப்பது போல் என்றும் க. நா. சு., நா. பார்த்தசாரதி, தி ஜானகிராமன் ஆகியோர் இவ்வளவு பொருட்படுத்தி தாக்குவதும் எழுத்துவின் கருத்து பாதிப்பின் விளைவு தானே. இன்னும் இன்று நடக்கும் அத்தனை ஆய்வு விமர்சன கூட்டங்களுக்கும் எழுத்து போட்ட பிள்ளையார் சுழி தானே.

இவையெல்லாம் கொண்டுதான் 'எழுத்துச் சூழ்நிலை' என்று நிதானிக்க முடிகிறது. முதல் ஏட்டில் எழுத்துவின் 'தொனி' கோடி காட்டப்பட்டிருந்தால் நூறாவது ஏட்டோடு எழுத்துவின் 'தொனி' உருவாகி இருப்பதை உணர முடிகிறது. தொனி கோடி காட்டப்பட்டதை முதல் ஆரம்பமாக வைத்துகொண்டால் இந்த தொனி உருவாக்கத்தை இரண்டாவது ஆரம்பமாக கொள்ளலாம்.

வருகிற ஏடு நூற்றியோராவது ஏடு. எழுத்து தன் இரண்டாவது ஆரம்பத்தை ஆரம்பிக்க இருக்கிறது—இரண்டாவது செஞ்சரி நோக்கி, கொஞ்சம் தொலைதான். 'ஸிக்ஸர்' 'பவுண்டரி' போட்டு வேகமாக எட்டிப்பிடிக்க முடியாது. ஒவ்வொரு ரன்னாகத்தான். நடுவில் 'பௌல்' ஆகிவிடாமல் லட்சியத்தை அடைய தமிழகத்தின் வாசகப் பேராதரவை எழுத்து எதிர் பார்க்கிறது. தாருங்கள்.

மொழிபெயர்ப்பு

# மூன்று கவிதைகள்

ஏ. கே. ராமானுஜன்

## தங்கை கல்யாணத்துக்குப் பின் - ஒரு ஒழுகும் குழாய்

சொட்டுச் சொட்டாய்
அதன் ஓட்டைவாயிலிருந்து விழுகிறது

பக்கத்து வீட்டுத் தட்டான்
மரச்சுத்தி அடிகள் போல.

எங்கள் அக்கா தங்கைகள் பலதினிசு,
ஒருத்தி கணவனுக்காக பக்குவமானவள்
நாங்களும் ஏழைகள் இல்லை.

ஒவ்வொரு மூன்றும் ஸ்வரமும் இறக்கம்,
நாலாவது மற்றதைவிட ஏற்றம்;
ஒரு கால் விநாடிக்கு—
ஓய்வு எடுப்பது போல் தோன்றும்.

அடிக்கடி அவை நின்றுவிடும் :
வாங்குவோர் யாரோடோ கதை பேச;
அல்லது பாக்கு புகையிலைக்காக
ஒட்டுத்துணி சுருக்குப் பையில் கையிட,
இல்லை, ஒருவேளை,
மழைநாளில் குஞ்சுபொரிக்க
பாய்க்கடியில் ஒரு சிறு வெள்ளி—முட்டை வைத்து
அடைகாக்க—
இருக்கும்.

ஆனால் இல்லை.
என் தங்கை கல்யாணத்துக்கு
வேலை செய்யும் பக்கத்து வீட்டு
தட்டான் யாரும் இல்லை அது

அடுக்களைக்குப் பின் இருக்கும்
அந்த மரத்தில்
டொக், டொக், டொக், டொக் கென கொத்தும்

வெயிற்கால
ஒரே யொரு மரங்கொத்தி.

நாங்கள் பார்த்த
ஒரு காக்கையின் அலகிடைப்பட்ட
அந்த பாம்பு போல்
ஒரு மரமும் கிறீச்சிடக் கூடாதா
நெளிந்து துடிக்கக் கூடாதா
என என் தங்கையும் நானும் நினைப்பதுண்டு.

## நீர்ப்பூச்சிகள்

ஒரு சில
ஒல்லிக்கால், குமிழிக்கண்ணு
நீர்ப்பூச்சிகளை தேடிப்பார்,
நீர் ஒட்டாத மயிரிழைக் கால்கள்
ஓடையின் சிற்றலை மீத்தோல்மீது
பளுவற்று
தவ்வுவது தெரியும்

இல்லை,
நீர்மேல் நடப்பவர்கள்
சித்தர்கள் மட்டுமில்லை.
இந்தப் பூச்சியும்
ஒளிப் பெருமண் சரிவில்
அமர்கிறது—
அதன் சிறுதுண்டு வான வெளிக்குள்
கண் வரை அமிழ்கிறது.

## சித்திரம்

பகல் சாப்பாட்டுக்குப் பின்
அவள் என்னை விட்டுப் போனதும்
கொஞ்சநேரம் நான் படித்தேன்.

திடீரென்று மறுபடியும் பார்க்க
நான் நினைத்தபோது
நான் பார்த்தது
தின்று மீந்த
ஸாண்ட்விச்,
ரொட்டி,
கீரை, மசாலிறைச்சி
எல்லாம்
அவள் பற்கடியை
ஏந்தி நிற்கும் உருவமே,

*சிறுகதை*

# நமது சந்ததிகள்

## ந. முத்துசாமி

நூலகத்திற்குச் சென்று படிக்கத் தொடங்கியதற்குப் பிறகு என் படிப்பறையில் தொங்கிக் கொண்டிருந்த 'அன்பே சிவம் என்று என் தந்தை மாட்டி வைத்திருந்த மந்திரத்தைக் கழட்டிவிட்டு 'அறிவே சிவம் என்று எழுதி சுவரில் புதிதாய் ஆணி அடித்து மாட்டி விட்டேன். அதைக் கழட்டியதற்குத் தடை சொல்லத் தந்தையில்லை பிறகு ஒரு நாள் நானே தொகுத்து எழுதி வைத்துக் கொண்டிருந்த சமீபகாலத் தமிழர் வரலாற்றைப் புரட்டிக் கொண்டிருந்த போது 'தந்தையே' என்று சிரித்தபடி அழைத்துக் கொண்டு சிவனே வந்து விட்டார். 'இத்தனை நாள் கருவில் இருந்த புழுக்கம் தணிய வெளியில் காற்றுட உலவி விட்டு வரலாம்'' என்றார். இருவரும் புறப்பட்டோம். கொஞ்ச நேரத்தில் ஒரு நாற்சந்தியைச் சென்றடைந்தோம் திசைக்கொரு சாலையாய் வந்து கூடிய இடத்தில் ஒரு கைகாட்டி மரம் நின்று கொண்டிருந்தது.

' எங்கே போகிறோம் ?''

என்னைத் தன் யோசனையுடன் பார்த்து விட்டு எங்கோ நினைப்புள்ளவர் போல் ''அதோ அங்கே'' என்று கை கைகாட்டி நீண்ட திசையில் கையை நீட்டினார். அத்திசையை ''நமது சந்ததிகள்' எனச் சுட்டியது கை காட்டி.

அது பெரிய சாலை. பல வழிப்போக்கர்கள் போய்ப் போய் மண் புரண்டு தடம் அழித்து புதுத் தடம் கிளம்பி அதிலும் புழுதி படிந்து ஒன்றின் மேல் ஒன்று குறுக்கும் நெடுக்குமாய் வைத்த பாதச் சுவடுகள் தோன்றக் காணப்பட்டது சாலை. அந்தச் சாலையில் எங்கள் புதுப் பாதங்கள் பட்டன. மேலே நடக்கவும் கொஞ்ச தூரத்தில் வழியில் சில பாதுகாவலர்கள் சாலையைக் குறுக்கே அடைத்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் முன்னே சிறு கூட்டம் நின்று கொண்டிருந்தது. திசைகளிலிருந்து வரும் செய்திகளாய் அவர்கள் பிற சாலைகளின் வழியே வந்தவர்கள். அந்தப் பாதுகாவலர்கள் ஒவ்வொருவராய் முகம் பார்த்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் மார்பை புடைத்துக் கொண்டு அவர்கள் முன் போய் நின்றோம் அவர்கள் எங்கள் முகத்தைச் சந்தேகத்தோடு பார்த்துவிட்டு கொஞ்சம் விலகி நிற்கும் படிச் சொல்லி விட்டனர். சிவனுக்கு என்ன யோசனை தோன்றிற்றோ, சட்டென்று ''சேரன் செங்குட்டுவன் பேர் சொல்ல வந்தவர்கள்'' என்று ஓரடி முன் போய் மார் தட்டிக் காண்பித்தார். அவர் செயலுக்குப் பலன் எப்படி இருக்குமோ என்பதை அறியாத நான் மிகவும் பணிவாக என்னிடம் இரக்கம் காட்ட வேண்டி நிற்பவன் போல் நின்றேன். மிகவும் அலட்சியமாக அவர்கள் எங்களை உள்ளே அனுமதித்து விட்டார்கள். சிலர் உள்ளே அனுமதிக்கப்படாமல் வந்த வழியே திரும்பிப் போய் விட்டார்கள்.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். திடீரென்று அவர் ஓரிடத்தில் நின்று ''அதோ ..அவர்கள் வருகிறார்கள்'' என்றார்.

' யார் ? வருகிறார்களா ? நமது சந்ததிகளா? இரண்டு புள்ளிகள் அல்லவா தெரிகின்றன.''

அவர் பார்த்த திசையில் தூரத்தில் இரண்டு புள்ளிகள் தெரிந்தன. புள்ளிகள் எங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தன. விழியின் ஒளிப்புள்ளிகள் போலிருந்தன. பார்வையில் பூச்சி பறந்தது போலிருந்தன.

''இல்லை. அவர்கள் தான் வருகிறார்கள் நன்றாகக் கண்களை விளக்கிக் கொண்டு பார்.''

கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தேன். இரண்டு மனிதர்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. ''ஆமாம். வருகிறார்கள். அவர்கள் புஞ்சைச் சேரிவாசிகள் அல்லவா ?''

''ஆமாம் ..அமாவாசையும் ராகுகாலமும்.''

''எதற்காக இங்கே இப்படிப் புதுச் சட்டை போட்டுக் கொண்டு.''

''ஊர்வழி போகிறார்கள் போலும். வரட்டும் பார்க்கலாம்.''

அவர்கள் எங்களைப் பார்த்து விட்டுச் சிரித்துக் கொண்டே வந்தனர்.'' என்னங்க ஆண்டே. இப்படி எங்கேங்க'' என்று இருவரும் ஒரே நேரத்தில் கேட்டார்கள்.

''உங்களைப் பார்க்கத்தான்.''

''எங்களைப் பார்க்கறதுக்கு என்னாத்துக்குங்க. ஏழைப் பறப் பசங்க ..ஒரு குரல் கொடுத்தா ஓடியாந்துட மாட்டோங்களா ?'

''நீங்கள் எப்படி இங்கே ?''

"ஆமாம் வரலாற்றுக் காலத்துக்கு முந்தின வெள்ளம்."

நாங்கள் நின்றுகொண்டிருந்த இடம் ஒரு காலத்தில் படகுத் துறையாய் இருந்தது இப்பொழுது உடைந்த படகின் மரத்துண்டுகள் மடித்துக் கிடந்தன. ஆற்றங்கரைச் சரிவில் படகுத் துறையில் பாதி நீரில் மூழ்கியும் பாதி வெயிலில் காய்ந்தும் மக்கிய கயிறுல் மடித்த மூளையில் கட்டப்பட்டுச் சில படகுகள் இருந்தன.

"நம் மூதாதைகள் படகு ஓட்டிய இடம்."

"இப்பொழுது ?"

"நம் அரசியல்வாதிகள் அங்கே பாலங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

'போய்ப் பார்க்கலாமா ?'

"அங்கு தான் போய்க் கொண்டிருக்கிறோம்' என்று அவர் ஆற்றங்கரையோடு நடக்க ஆரம்பித்து விட்டார்.

அவர்கள் கூட்டமாகப் பாலங்கட்டிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

"புதுப் பாலத்திற்கு இப்பொழுது என்ன தேவை ஏற்பட்டது. பழைய பாலம் உடைந்து விட்டதா ?"

"நமது சந்ததிகளை அக்கரையில் வேகமாக அடைய இப்பாலம். தேவை என்று தோன்றியதால் கட்டுகிறார்கள்." என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது கூட்டத்தில் சலசலப்புக் கேட்டது. என்னவென்று அருகில் சென்று பார்த்தபோது 'மரவட்டை' என்ற சொல்லைப் பற்றி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

("மரவட்டை என்பது கொச்சைச் சொல் அல்லவா?" "பேச்சு வழக்கை எழுத்து வழக்காக்காமல் மொழியை வளர்க்க முடியாது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.' 'இதற்கு முன் அது எழுத்து வழக்கில் இல்லை என்பது என்ன நிச்சயம்." "முதலில் அது தமிழ்ச் சொல்தானா என்பதை நிச்சயமாக்கிக் கொள்வோம்")

அவர்களுடைய வாதம் மேலும் தொடரும் போலத் தோன்றிற்று. ஆனால் சிவன் இடையில் குறுக்கிட்டு "ஏன் இப்படி வாதமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் ?' என்று ஒரு கேள்வியைப் போட்டு வைத்தார். இப்படி ஒரு கேள்வி அன்னியக் குரலில் எழுந்ததைக் கேட்டதும் கூட்டத்தின் குழப்பம் அடங்கி எல்லோரும் எங்கள் பக்கம் திரும்பினார்கள்.

கேள்வியின் தொனியைக் கவனியாது சொற்களின் பொருளை மட்டும் எடுத்துக் கொண்டு ஒருவர் பதில் சொன்னார். இந்தப் பாலத்தின் மீது மின்சார ரயிலை விடப் போகிறோம். "அது மரவட்டையை போலப் பாலத்தின் மீது போகும்' என்று உவமை சொல்ல வந்த போது இந்த வாதம் வந்து விட்டது" என்றார் அவர்.

அப்பொழுது தான் நான் பாலத்தை முழுதாகப் பார்த்தேன். பாலம் வளைந்து வளைந்து போயிற்று. "ஏன் இப்படி வளைவாகப் பாம்பு ஊர்ந்தது போலக் கட்டியிருக்கிறீர்கள். நேராகக் கட்டியிருக்கலாமே !"

அவரே சொன்னார். "கட்டியிருக்கலாம் தான். ஆனால் நாங்கள் ஒவ்வொருவரும் கொடுத்த திருப்பம் தெரியாமல் போய்விடுமே."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மின்சார ரயில் ஊதிக் கொண்டு வந்து எங்கள் முன் நின்றது. எல்லோரும் வண்டியில் ஏறிக் கொண்டோம். வண்டி மிகவேகமாகப் புறப்பட்டது. ஆனால். வண்டி போன வேகத்தில் அதனால் வளைவுகளுக்குள் நுழைந்து நுழைந்து மரவட்டை போல் போக முடியவில்லை. அது நேராகவே பாய்ந்தது. பாய்ந்த வேகத்தில் தடம் புரண்டு அக்கரையில் போய் விழுந்தது அறுந்த மின்சாரக் கம்பிகளில் எல்லோரும் சூடு போட்டுக் கொண்டார்கள். ஒவ்வொருவர் உடம்பிலும் குறுக்கும் நெடுக்குமாய் சூடு விழுந்திருந்தது. உடம்பு முழுதும் தீப்புண் கொப்புளங்கள். வெந்த சதையின் நாற்றம். ஆப்பிரிக்காவின் ஆதிவாசிகள் தங்கள் முகத்தில் அலங்காரம் செய்து கொண்டது போன்ற முகத்தோற்றம் ஆனால், 'ஓகோ கோ' என்று எல்லோரும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"ஏன் இப்படிச் சிரிக்கிறார்கள். இவர்களுக்கு அழுகை வருவதில்லையா ?" என்று சிவனின் காதில் மெதுவாகக் கேட்டேன் அவரும் 'எல்லோரும் மொத்தமாகச் சூடு போட்டுக் கொண்டதால் வலி தெரியவில்லை போலிருக்கிறது" என்றார் என் காதோடு. எங்கள் பேச்சு அவர்களுக்குக் கேட்டிருக்க வேண்டும் சிரித்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று சிரிப்பை நிறுத்தி விட்டு எங்கள் இருவரையும் பார்த்தார்கள். நாங்கள் இருவரும் சூடு போட்டுக்கொள்ளவில்லை.

"இனிமேல் இங்கிருப்பது நல்லதல்ல. நாம் போகலாம்."

நீண்ட தூரம் பயணம் செய்த அலுப்பை நான் உணர ஆரம்பித்தேன் 'இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருக்குமோ. உங்கள் வேகத்திற்கு என்னால் ஈடுகொடுக்க முடியவில்லை."

"அமாவாசையும் ராகுகாலத்தையும் பார்த்து விட்டு வரலாம்."

புஞ்சைச் சேரிக்குப் போவதற்கு "கொரவன் தோப்பு வழியாகத்தான் போக வேண்டும். குறவன் தோப்பு இப்பொழுது புதுத் தோற்றம் பெற்றிருந்தது. நான்கு பக்கமும் சிமெண்டுக் கம்பங்கள் நட்டு இரும்பு முள் வேலி பின்னியிருந்தார்கள். பருவ மழைகளில் பாசி படிந்து வெயிலில் காய்ந்து பொருக்குத் தட்டாமல் அவை புது நிறத்தோடு இருந்தன" சாம்பல் நிறம் இன்னமும் மாறவில்லை. பின்னியது போக மிஞ்சிய முள் கம்பிச்சுருள் ஒரு பக்கம் கிடந்தது. வெட்டிய சிறுமுள் கம்பித் துண்டுகள் வேலியின் ஓரமாக நெடுகிலும் கிடந்தன.

உள்ளே மாங்கன்றுகள் துளிர்விட ஆரம்பித்திருந்தன. மாங்கன்றுகளுக்கு இடை நிலத்தில் பலவகைக் குறுகிய காலப் பயிர் வகைகள் பயிர்

செய்திருந்தார்கள் நான்கு புறமும் ஓரங்களில் வாழை பயிராகியிருந்தது. வாழைகளுக்கு இடையில் தென்னம் பிள்ளைகள். தோட்டத்தில் எங்கோ தண்ணீர் இறைக்கும் எஞ்சின்சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் டிராக்டர் உழுது கொண்டிருந்தது.

தோட்டத்தைப் பார்த்துக்கொண்டே தோட்டத்தின் வாயிலுக்கு வந்து சேர்ந்தோம். தோட்ட வாயில் வளைவில் 'கிராம நலக் கூட்டுப் பண்ணை' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதியிருந்தார்கள்.

''இது தான் அம்மூவரின் பண்ணை போலும்.''

''உள்ளே போய்ப் பார்க்கலாமே''

உள்ளே நுழைந்ததும் பக்கத்தில் குடில் இருந்தது. அதில் அம்மூவரும் 'சாஸ்திரிகள்' பூணூலுக்கு நூல் நூற்பதைப் போல தக்ளியில் நூற்றுக் கொண்டிருந்தார்கள். வாய் ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தது என்ன மந்திரம் என்பது தெளிவாகத் தெரியவில்லை இடையில் தேங்கிய மூச்சு வேகமாக வெளிவரும் போது அடித்துக் கொண்டு வந்த சொற்கள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கேட்டன. ஹரிஜன், ஆதித் திராவிடன் என்ற சொற்கள் மட்டும் தான் தெளிவாகப் புரிந்தன. எங்களைக் கண்டவுடன் நூற்பதை நிறுத்திவிட்டு வரவேற்றனர்

''படையாச்சியும் நாயுடுவும் கூட பூணூல் போட ஆரம்பித்து விட்டார்கள் ?'' என்றார் சிவன் சிரித்துக் கொண்டே.

''இல்லை மூக்கணாங் கயிறுக்கு நூற்றுக் கொண்டிருக்கிறோம்'' என்றார் கோபாலய்யர்.

''இப்போ கோபாலய்யர் கூட பூணூல் போடுவதில்லையே'' என்றார் கோவிந்தசாமி படையாட்சி.

'வேதமந்திரமா ?' என்றேன் நான்.

''இல்லை ...இல்லை'' என்று சிரித்து விட்டு ''எங்கள் பல்கலைக் கழகத்து பேராசிரியர்கள் கட்டினார்கள். அவர்கள் நல்ல அரசியல் வாதிகள்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி நாயுடு.

அவர்கள் திரித்த நூலிலிருந்து முறுக்கிய மூக்கணாங் கயிறுகள் சாயம் தோய்க்கப்பட்டு பக்கத்தில் கிடந்தன. அவைகளை எடுத்துப் பார்த்து விட்டு ''சாயம் போகாமல் இருக்குமா ?'' என்றார் சிவன்.

''பழகிப் போன பிறகு சாயத்தை யார் பார்க்கப் போகிறார்கள். ஆனால், இவை மிகவும் வலுவானவை.'' என்றார் கோபாலய்யர்.

நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது ராணுவப் பயிற்சி பெற்றவர்களைப் போல மிடுக்காகக் காணப்பட்ட மூன்று இளைஞர்கள் குடிலுக்குள் நுழைந்தார்கள். கையில் கொண்டு வந்திருந்த ஆகாரத்தை வைத்துவிட்டு 'நாங்கள் உழவு தளைக்குப் போகிறோம்'' என்று கிளம்பிப் போய் விட்டார்கள். அவர்கள் சூடு போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு ''இவர்கள் ?'' என்றேன்.

'எங்கள் பையன்கள்.''

''விவசாயத்தைக் கவனித்துக் கொள்கிறார்களா ? படிக்க வில்லையா ?''

''படிக்கவில்லையா ?'' என்று புருவத்தை மேல் தூக்கிப் பார்த்துச் சிரித்துவிட்டு கோபாலய்யர் சொன்னார். ''விவசாயத்தில் மேற் படிப்புப் படித்தவர்கள். இரட்டை ஆற்றைக் கடந்து புதுப் பாலத்திற்கு அருகில் இருக்கும் நமது சந்ததிகள் பல்கலைக் கழகத்தில் படித்து முதன்மையாகத் தேறியவர்கள். அங்கே மொழியியலை மூன்றாண்டுகள் கட்டாய பாடமாகச் சொல்லித் தருகிறார்கள் அன்னம் பாலிலிருந்து தண்ணீரைப் பிரித்து விடுவதைப் போல இவர்களால் தமிழில் இருந்து பிற சொற்களை சுலபமாகப் பிரித்துவிட முடியும்.''

''ஓகோ... அப்படியா ?''

''நமக்கு நேரமாகிறது.''

''கொஞ்சம் பழச்சாறு சாப்பிட்டு விட்டுப் போங்கள்.'' என்று கோபாலய்யர் சாப்பாடு வந்த பையை எடுக்கப் போனார். ''மிக்க நன்றி'' இப்பொழுது பசியில்லை. வருகிறோம்.'' என்று நாங்கள் புறப்பட்டு விட்டோம்

எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. மேலே நடக்க முடியவில்லை அதை உணர்ந்த சிவன் ''இன்னும் கொஞ்சம் நேரம். அமாவாசையையும் ராகு காலத்தையும் பார்த்து விட்டுத் திரும்பலாம்'' என்று புஞ்சைச் சேரிக்குப் போகும் ஒற்றையடி வரப்போடு நடந்து கொண்டிருந்

---

# விடிவு

## கி. அ. சச்சிதாநந்தம்

விழித்தெழும் வெய்யோன்கண்
வழியும் பீளை வைகறை

குண்டு மல்லிச் செடியின்
என்புக் கூட்டின் மேல்
சிலந்தி பின்னிய எச்சில்
வலைக்கு அகப்பட்டது
அரவம் உதறிய
வெறும் தோல்.

கானல்நீர் வளர்த்த
கனவுகள் காச நோயால்
காறித் துப்பின
குருதித் துளிகளில்
நெருங்கும் நெடுங்காலத்தின்
நிழற் கருமை.

இரவின் சுமை உதறி, சிறகு
விரிக்கும் குயில்,
பனிக்காற்றில்
பாடுவதின்
பொருள் பகலா ?

தார். எதிரில் தலையில் கஞ்சிக் கலயத்தோடு கழைக் கூத்தாடும் பெண்ணைப் போல வரப்போடு வந்து கொண்டிருந்த பறைச்சி எங்களைக் கண்டதும் பக்கத்து வயலில் இறங்கிக் கொண்டாள். அவளைப் பார்த்து ''அமாவாசையும் ராகுகாலமும்'' என்று நான் கேள்வியைத் தொடங்கியவுடன், ''இல்லீங்க ஆண்டே, எல்லாம் உழப் போயிருக்குதுவோ. நான் அங்கேதாம் போய்க்கிட்டிருக்கேன்'' என்று சொல்லி விட்டாள் அவள். பிறகு நாங்கள் அவளைப் பின் தொடர்ந்து உழவு தளைக்குப் போனோம். அங்கு அமாவாசையும் ராகுகாலமும் புழுதி உழுது கொண்டிருந்தார்கள். ஒரு வாரத்திற்கு முன்புதான் மழை பொழிந்திருக்க வேண்டும் போலத் தோன்றிற்று படைசாலில் புரண்ட மண் ஈரமாய் இருந்தது. மாடுகளுக்கும் பதிலாக அவர்களே ஏர் இழுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மூக்கணங் கயிறு போட்டுக் கொண்டிருந்தார்கள். கிராம நலக் கூட்டுப் பண்ணையில் சந்தித்த இளைஞர்கள் ஏர் ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன இது புதுக் கோலம். மூக்கணாங் கயிறு.''

''புதுக்கோலம் அல்ல. உழைப்பின் சின்னம். மரபை விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டும் குறியீடு'' என்றான் ஏரோட்டி.

''ஆண்டே இது வெறும் மூக்கணாங் கயிறு இல்லீங்க...முடிகயிறு...மனிதன் மாடாய் உழைப்பதைக் கண்டு பிறர் கண் படாமல் இருக்க மந்திரித்துக் கொடுத்த முடிகயிறு. உடம்பில் வலி ஏறாமலும் தடுக்கும் முடி கயிறுங்க ஆண்டே'' என்றான் ஏர் இழுத்துக் கொண்டிருந்த ராகுகாலம்.

'அதைக் கேட்கவில்லை மூக்கணாங்கயிறு இருக்கிறது மாடுகளைக் காணவில்லையே என்று தான் கேட்டேன்.'

''நமது மாடுகள் வலுவில்லாதவை. அவைகளின் மூலம் நமக்குக் கிடைக்கும் பலனைக் காட்டிலும் நம்மிடமிருந்து அவை சாப்பிட்டுவிட்டுப் போவது அதிகம் ஆகவே, நமது பசுக்களை மலடாக்கினோம்: வயதான காளைகள் இறந்து விட்டன இப்போது நம்மிடம் இருப்பவை நல்ல கறவை மாடுகள். அவை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை அவைகளுக்குப் பிறக்கும் காளைகளுக்குக் கொண்டையில்லை நுகத்தடி கழுத்தில் பாவாது. ஆகவே அவை உழவுக்கு லாயக்கற்றவை. ஆனல், நல்ல பொலிகாளைகள். பொலிகாளைகளைத் தவிர மற்றவற்றை நவீன கசாப்புத் தொழிற்சாலைகளுக்கு விற்றுவிடுகிறோம். விவசாயத்தில் நஷ்டம் வராமல் ஓரளவு அது உதவுகிறது. நமது நாட்டில் மக்கள் தொகை அதிகமல்லவா? மக்கள் சக்தியை வீணாக்கலாமா? ஆகவே நாங்கள் உழைக்கிறோம். இந்த நாட்டின் வளர்ச்சிக்காக நாங்கள் பணி செய்கிறோம். பின்னால் வரும் நமது சந்ததிகள் நம் மேல் பழி சொல்லக் கூடாதல்லவா?'' என்றான் ஏரோட்டி

அமாவாசையைப் பார்த்துச் 'சிவன் கேட்டார் '''புதுச்சேரிக்குப் போவது என்ன வாயிற்று?' என்று. அவர்கள் அப்பொழுது ஏரை முண்டி இழுத்துக் கொண்டிருந்ததால் அவர் கேட்டது அவர்கள் காதில் விழவில்லை. மீண்டும் ''புதுச்சேரிக்குப் போவது என்ன வாயிற்று?'' என்றார்.

எங்களுக்கு அறிமுகமில்லாத, ஞுடுபோட்டுக் கொண்டிருந்த இன்னொரு ஏரோட்டி எங்களிடம் சண்டைக்கு வந்து விட்டான்'' 'ஏய் சும்மா போக மாட்டே. என்ன கலகம் பண்ண வந்தியா? நாட்டுத் துரோகிகளே. குடியை மறந்திருப்பவர்களைப் பார்த்து பழைய ஞாபகத்தைக் கிளற வந்தீர்களா? துரோகிகளே'' என்று சீறினான் அவன்.

சிவன் சாந்தமாக ''நான் அதைச் சொல்லவில்லை. புதுச்சேரிக்குக் குடிபோவதைப் பற்றிக் கேட்டேன்'' என்றார். அவர் பயந்து விட்டார் போலத் தோன்றிற்று. ஓரடி பின் வாங்கிக் கொண்டார்.

இம்முறை அமாவாசை முந்திக் கொண்டு பதில் சொல்லிவிட்டான். ''கலெக்டர் அய்யா உத்திரவு கெடக்கிலீங்க ஆண்டே''

---

# பார்வை

## எஸ். வைதீஸ்வரன்

வெள்ளிப் பந்தென்று
சொல்லில் விளையாடி,
தங்கக் கிண்ணமென
சோறூட்ட கதை சொன்ன
விஞ்ஞான மோகினியின்
மூன்னாள் விண் - கவிகள்
கூடி நெஞ்சை
மேலுக்கு இழுத்தாலும்
இன்று வெடிகாலே
சமயலறை ஜன்னலூடே
வானைத்துளாவிய
புதுக்கண்கள்
எவர் சில்வர் நிலவை
கண்டு விட்டுக்
காபி குடித்தது!

ஜப்பானிய
ஓரங்க நாடகம்

# திருடர்கள்

## கவாட்டாக்கி மொக்வாமி

(சென்ற மாத தொடர்ச்சி)

தமிழாக்கம் : ஆ. ம. ராமச்சந்திரன்

சென்டா : (கோப உணர்ச்சியோடு) ஆனுல், நீ என்ன சொல்றே! நீ மறந்துட்டியா நாம் சிறையில் இருந்தப்போ ஒரே ரத்தத்திலே பிறந்த சகோதரரா பாவிச்சுக்குனுேமே, அதை நம்ம ஒவ்வொருவர் கையையும் உடைந்த சிப்பி ஒன்னு மூலம் வெட்டி, ரத்தத்தை குடித்துக் கொண்டோமே, நாம் சத்தியம் செய்துக்கிட்டோமே. அப்போவிருந்து நாம் இருவரும் சாவிலும் வாழ்விலும் ஒன்னுவேயிருக்கணும்னு சத்தியம் செஞ்சோமே. அதை மறந்து இருக்க முடியாதே. நான் கேட்டதை நீ செய்லேன்னு, நீ எந்த விதத்திலும் எனக்கு உண்மையானவன் இல்லே.

சிமோசோ : இல்லேயே. நான் உன்னுடைய நண்பனுக இருப்பதால் தானே இந்த இதயத்திலே உன்னே நிறுத்தி வைக்க விரும்புறேன்.

சென்டா : விளங்கச் சொல்லு.

சிமோசோ : மொசுக்கியிடம் நீ வச்சிருந்த வஞ்சம், பத்தி எனக்கு தெரியாது. ஆனுல், நீ அவனுடைய பணத்தோடு ஓடிறதா வச்சுக்குவோம், அவங்க ரெண்டு பேரை கொன்னுபோட்டு அப்பவே போலீசு உன்னே சந்தேகிச்சுடுமே. நேத்துதானே நீ அவங்களே பயமுறுத்தி பணம் பறிக்க போயிருந்தே, அதனுலே போலீஸ் உன்னே சந்தேகிக்கும். ஊர்லே எல்லா பகுதிக்கும் தந்தியடிக்கப்பட்டு விடும். பிறகு உன்னே அவர்கள் தண்டிக்கும்போது நீ திருடனுக அல்ல; கொலேயாளியான்னு உன் தலேயை அவர்கள் தண்டிப்பதும் நிச்சயம் இன்னிக்கி ராத்திரி ஓராயிரம் யென்களே உன்னுல் கை வைக்க முடியும். ஆனுல், நீ மூனே நாள்லே பிடிபட்டுப் போவே. அதிலே அம்பது யென்னுக்கு மேலே செலவழித்திருக்க முடியாது. இந்த சிறு விஷயத்துக்காக உன் உயிரை அர்ப்பணிக்கறதைவிட முட்டாள்தனம் வேறு என்ன இருக்க முடியும்? நீ நான் சொல்ற புத்திமதியை கேட்டு நேரா வீட்டுக்குப் போ. நான் உனக்கு எல்லா வகையிலுமே உண்மையான சகோதரனுகவே இருப்பேன். உனக்கு என்னுல் முடிந்ததை செய்வேன். உன் நன்மைக்காகவே சொல்றேன். உன் பங்கான ஐந்நூறு யென்னே மொத்தமா திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால் உன்னுலே முடிஞ்ச பணத்தையாவது பகூசி மாயாவிற்கு திருப்பிக் கொடு என்னேடே போலீசுக்கு வா. உண்மையை ஒப்புக்கொள்வோம்.

சென்டா : நாற்பதை இன்னும் எட்டலே, ஆனுல், நீ இதற்குள் உன் வலுவை இழந்துட்டாப் போலேத் தெரியுது. நான் போதுமான எதிர்க்கிற போக்கை எனக்குள்ளே பெற்று இருக்கேன். என்னே எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்திருந்தாலும் நான் எதிர்க்கும் தன்மையை பெறவே செய்வேன் நான் வீழ்ச்சியடையறவரை எதிர்த்துக் கொண்டே இருப்பேன் இப்போதே அவர்களிடம் போய் என்னே ஒப்புச்சுக்கப் போவேன். நான் நினேக்கிறேன் ஒரு வகையிலே என் தண்டனே மாறலாம்னு. பத்து வருட கடுங்காவல் நான் பெறக் கூடும். என்னே முட்டாள் என்பே, நீ. ஆனுல், நீ அவ்வளவு அறிவாளியில்லேயே.

சிமோசோ : பத்து வருட.. கடுங்காவலா? இதிலிருந்தே தெரிதே. நீ எந்த அளவுக்கு விஷயத்தை புரிஞ்சிருக்கேன்னு. சர்க்கார் சிறப்பா இரக்கம் காட்டும். நீ திருடிய பணத்தை திருப்பிக் கொடுக்கும் போதும் உன்னே நீயே ஒப்படைச்சுக்கும் போதும் அவங்க ஒரு பத்து வருட தண்டனேயை ஏழு வருடம் அல்லது ஐந்து வருடமா குறைப்பாங்க. இந்த தண்டனேயை ஒரு முறை அனுபவிச்சா நாம் செஞ்ச எல்லா குற்றங்களும் கழுவப்பட்டு எல்லாமே மறக்கபபட்டு விடும். இந்த சோதனேயை உன் வலிமையால் முயற்சித்தா உன் குற்றம் நீங்கிடும்.

நிகழ்ச்சி உரைப்பவன் : அது உண்மை. நீ பெறுவாய். ஒரு சமயம் உன்னே தண்டித்த வானுல

கத்திலிருந்து ஆசி பெறுவாய் நீ.

சிமோசோ : இதே நாட்கள் சோகூரேட் காலமாயிருந்தா பத்து பென்களுக்காககூட திருட்டுன்னு மரணம். இப்போ அப்படிப்பட்ட தண்டனையாயிருந்தா நீ குற்றத்துலேயிருந்து விடுவிச்சுக்கணும் என்பதை பற்றி யோசிக்கலாம் எப்போதிருந்தாலும் ஒரு நாள் சாக வேண்டியது தானே. ஆனால், இப்போ தண்டனைக்குரிய சட்டம் மாற்றப்பட்டு இருக்குதே. ஆயிரம் பென்களை திருடினாலும், ஏன் கொள்ளைக்கு கூட ஆயிரமாயிருந்தாலும் சரி, ஆயுள் தண்டனை தான். இப்போ அப்படி சட்டம் திருத்தப்பட்டு இருக்குது இப்படிப்பட்ட நல்ல காலத்திலே நீ வாழறதுக்காக நன்றியுடையவனா இருக்கனும். அதை விட்டு, உன் வாழ்வை திட்டமிட்டு யாரையோ கொல்ல நெனச்சி அழிச்சுக்க பாக்கிறியே. நீ தெளிவற்றவன்னு இதிலேருந்து தெரியுது. அபூர்வமான இந்த உடலை அனுவசியப்படுத்தாதே. உன் இதயத்தை மாற்றிக்கொண்டு என்னோடே சேர்ந்துடு.

நிகழ்ச்சி உரைப்பவன் : கோணல் இதயம் படைத்த சென்டா தவறாக கருதிக் கொண்டான் சிமோசோவின் புரியத்தக்க நேர்மையான வார்த்தைகளை.

சென்டா : நீ நேர்மையா இருக்க காரணம் உனக்கு செல்ல மகன் ஒருவன் இருக்கான். அதோடு உன் தகப்பனார், சகோதரி வேறே. நீ நேர்மையா இருக்க விரும்புறதுக்கு அர்த்தம் இருக்கு. புரிஞ்சுக்க முடியுது. ஆனால் எனக்கோ பெற்றவங்களோ குடும்பமோ இல்லை. நான் திருந்தினாலும் அது யாரையும் சந்தோஷப்படுத்தாது. என் வாழ்நாள் பூராவையும் திருடறதுலேயே செலவழிப்பேன் நான் ஒரு தவறு செய்து அதுக்காக கொல்லப்பட்டால் நல்லது தான். அதுவே அதற்கான முடிவாயிடும்.

சிமோசோ : உண்மையாவே நீ சுத்த முட்டாள், உன் பெற்றோர் இந்த உலகத்துலே இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும், கல்லறையிலே உனக்காக வருத்தப்படுவாங்க என்பதை நினைக்க மாட்டாயா? எந்த அடையாளத்தையும் விடாமலே மக்கள் மறைவதால், யாருமே மன்னாதிமன்னனும் இறந்தவங்களுக்கு மரியாதை செலுத்த மாட்டாங்க ஏதாவது ஒன்னு இருந்தே தீரணும். நீ உன்னுடைய வழிகளை மாற்றிக் கொள்ளனும். உன் குற்றங்களை ஒழிச்சுடு. உன்னை பெத்தவங்களுக்கு மகிழ்ச்சியை கொண்டு செல், அடுத்த உலகிற்காவது.

சென்டா : அவர்களை மகிழ்விக்க தான் எதுக்கு அக்கறைப்படனும்? அவங்க என் பெற்றோர். ஆமாம். ஆனால், அவங்க இன்பத்திலே என்னை உற்பத்தி செஞ்சாங்க. நான் அவங்களுக்கு நன்றி தெரிவிக்கவோ கடமைப்படவோ செய்யனும்னு நினைக்கல்லே. அவங்க இன்பத்தின் பரிசாக இப்போ அவங்களே துன்பப்பட்டட்டும்.

நிகழ்ச்சி உரைப்பவன் : ஆத்திரத்தில் ஆபாசமான வார்த்தைகளை உபயோகிக்கிறான். கேட்டுக் கொண்டிருந்த சிமோசோ முற்றிலும் ஏமாற்றமடைகிறான்.

சிமோசோ : நான் நினைக்கலை இப்படி ஒரு அடி முட்டாளாய் நீ இருப்பாய் என்று. இனி இன்று இரவு முதல் நான் உன்னிடம் பேசமாட்டேன். நீ நரகத்துக்குத் தான் போகணும். அதுவே நான் கோருவது.

சென்டா : நீ என்ன சொல்கிறாய்? நான் உன்னை சகோதரன் என உறுதிப்படுத்தி கொண்டபோது நாம் எது நடந்தாலும் அதுக்குக் கட்டுபடனும் என சத்தியம் செஞ்சோமே, வாழ்விலானாலும், சாவினாலும் என்று, நம்ம உறவை இன்னிக்கி ராத்திரியேயிருந்து நாம் அன்னியர். இன்னிக்கி நான் பிடிபட்டால் உன்னைத்தேடி போலீசை அனுப்புவேன். ஆகவே தயாரா காத்திரு.

சிமோசோ : நான் சொல்றது எதையாவது கேட்கறயா, இல்லையா?

சென்டா : இனியும் நான் உன்னை மதிக்கிறேன் ஏன்னால் நீ என்னைவிட வயதானவன் என்பதால் தான் ஆனால் நான் தான் அன்னியனாகி விட்டேனே. அதற்குப்பின் நாம் சமம் தானே. யார் சொல்றதை யாரும் இனி எதுக்கு கேட்கணும்?

சிமோசோ: நீ கேட்கமாட்டாய் என்றால் வேண்டாம். இப்போ உனக்கு எந்தவித கைமாறும் வேண்டாமாகையால், என்னை நான் உள்ளேயே வைத்துக் கொள்ளப் போறேன். உன்னை கைது செய்யவருவாங்க கோழைபோல் ஓடிடாதே.

சென்டா : நான் திரும்பி ஓடமாட்டேன் நீ எப்போ வேண்டுமானாலும் வந்துகொண்டு போ. நான் இன்ன ராத்திரி மொசுகூக்கி வீட்டை உடைச்சு புகுவதன் மூலம் என் வாழ்வை பணயம் வைக்கப் போறேன். ஆனால், நான் ரெண்டு பேரையோ மூவரையோ கொன்னாலும் எனக்கு ஒரு தலைதான் இருக்கு அவங்க வெட்ட. கை கொடுக்கிற தந்திரத்தை என்னிடம் செய்யாதே. அப்படி செய்தே நீ செத்த மனுசன்.

(அவன் தன் 'கிமனோவை' கழற்றுகிறான், ஒரு தோளிலிருந்து, அவனுடைய கை இலகுவாக அசைய அங்கியில் மறைத்து வைத்திருந்த கத்தியை இழுத்து காற்றில் இப்படியும் அப்படியுமாக இழுக்கிறான். கத்தியை வெறுப்போடு பார்க்கும் சிமோசோவின் முகத்தின் முன்னே. எதையும் அலட்சியப்படுத்தும் தோரணையில் அவன் கோபச் சிரிப்போடு நிற்கிறான்.)

சிமோசோ : அதுவே நல்லது என நீ என்னை பயமுறுத்துவாயெனில் அது உள்ளத்திலே அவ்வளவு பதியக் கூடியதல்லவே. நான் நினைக்கலை நீ மறந்திருப்பாய் என்று. நான் எப்படி உன் சகோதரனா சத்தியம் செய்தேன் தெரியுமா? நான் சிறையில் நோய் வாய்ப்பட்டிருந்தப்போ, நீ எனக்கு செய்த உதவியால் தான் உன்னிடம் அன்பு செலுத்தினேன். தண்டனையை அனுபவித்து விட்டு வெளிவந்தபோது நான்தான் உனக்கு எப்படி திருடுவதென கற்றுக் கொடுத்

தேன். நீ இப்போது என்ன செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எனக்கெதிராக கத்தியை வீசுவதன் மூலம் நீ என்ன செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்? என்னை குத்த திட்டமிடுகிறாயா? கல்லறையின் முனையை வெட்டிவிடலாம், நீ. ஆனால், என்னுடைய தலையை வெட்ட முடியாதே. அப்படி உன்னால் முடியுமானால், இப்போ முயற்சி செய், பார்ப்போம்!

நிகழ்ச்சி உரைப்பவன் : அவன் விசையுடன் முன்னேறுகிறான் எவ்வித பயமுமின்றி சென்டா தயங்குகிறான், முடிவுக்கு வாராது அவனைத் தாக்க வேண்டுமா என.

சென்டா : நான் வேறென்ன செய்ய முடியும் அவனைக் குத்தாமல்? (அவன் சிமோசோவின் மேல் கத்தியை நீட்டுப் போக்கில் வெட்டுகிறான். அவன் தன் மேல் படாதவாறு தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான். ஒரு கழி கொண்டு சென்டாவோடு தாறுமாறாக போரிடுகிறான். சிமோசோ சென்டாவின் மணிக்கட்டு மீது கம்பால் அடிக்கிறான். கத்தி தோட்ட மண்ணில் விழுகிறது சென்டா மறுபடியும் அதை எடுக்க முயல்கிறான். ஆனால், சிமோசோ அதைத் தடுத்து விடுகிறான். சிமோசோ கடைசியில் சென்டாவை தோட்டத்தில் வீழ்த்தி விடுகிறான். அவன் கத்தியை எடுத்துக்கொண்டு சென்டாவினுடைய மார்புக் கெதிராக வைத்து அழுத்துகிறான்.)

சிமோசோ : நல்லது சென்டா. இப்போ உன்னை கொல்ல வேண்டுமானால், ஒரே அழுத்தம். அவ்வளவு தான் இப்போது தேவை நீ இப்போ ஒன்றுமே செய்ய முடியாது. உன் வாழ்வு அழிவதானாலும் நீ இனி மறு பரிசீலனை செய்ய மாட்டாய்.

(அவன் மார்பில் அழுத்தியிருந்த கத்தியின் அழுத்தத்தை தளர்த்துகிறான்.)

சென்டா : அவனுடைய போக்கை யார் மாற்றுவது? நீ என்னை கொல்ல வேண்டுமானால், தாராளமாகச் செய். அதன் மூலம் நீ ஒரு கொலையாளி ஆகலாம். ஆனால் நான் ஒருவன் மட்டுமே இறக்க மாட்டேனே உம் என்னை கொலை செய்து விடு

சிமோசோ : ஆம். நீ ஒரு போக்கிரியா இருந்தாலும், நீ ஒரு மனிதன் தான். நான் உன்னைக் கொன்றாலும் அதற்காக சாகத்தான் வேணும்.

சென்டா : அப்படி நீ உணருவதானால், என்னை கொல்லு. வா. கொல்லு. சீக்கிரம், கொல்லு.

(அவன் சிமோசோவுக்கு எதிராக தன்னை தள்ளிக்கொண்டு, அவனது கிமனோவை' கையால் பிடித்து இழுத்து, அவனை தரையில் கிடத்துகிறான்.)

சிமோசோ : நீ இதைத்தானே கேட்டே. நான் உன்னை கொல்லுவேன்.

நிகழ்ச்சி உரைப்பவன் : கத்தியை கீழே தாழ்த்திப் பிடித்துக் கொண்டு, சிமோசோ அவனுடைய கையை உயர்த்துகிறான் அவனைக் குத்த. ஆனால்,

தயங்குகிறான்.

சென்டா போக்கிரிதான், இன்று வரை.

அவர்கள் ஒருவரை யொருவர் சகோதரர் எனக் கூறிக் கொண்டனர்.

அவனுடைய எழுச்சியின் உந்துதலால், சிமோசோ மனம் இளகுகிறான்.

சிமோசோ : நீ என்னை கொல்லச் சொல்றே, எனக்கும் தெரியும் நான் என்ன செய்யணும்னு. நான் அந்த அளவுக்கு என்னை கொண்டு செல்ல முடியாது. ஒரு சமயம் உன்னை நான் என் சகோதரனு நெனைச்சேன், தவறு செய்ததை உணர்ந்து திருடனாயிருப்பதை விட்டாயானால், வாழ்நாள் முழுதும் நான் உனக்கு உதவுவேன். அந்த ஐந்நூறு யென்களை உன் பாகமா தயார் செய். நான் எப்படியு என் பங்கை சமாளிச்சுடுவேன். உன் வாழ்நாளிலே ஒரு புது அத்தியாயத்தைத் திருப்பினால், நான் உன்னிடம் சொல்லியது போல, நான் கொடுக்க வேண்டிய பணத்தை பகூசிமாயாவிற்கு கொடுத்து விட்டதும் என்னை போலீசுலே ஒப்புச்சிக்க தீர்மானிச்சுட்டேன். என்னை அரசாங்க அனுதாபத்திற்குரியவனுக்கிக்க தீர்மானிச்சுட்டேன். என்னுடைய தண்டனையை குறைப்பாங்க என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு பணத்தை கொடுத்துட்டு உன்னை சரணடைய செய்து கொள்வது காட்சிக்கு அல்ல. இப்படியொரு காரியம் நீ செஞ்சதுக்கு திருடன்களும் உன்னை ஒரு வீரனு மதிப்பானுங்க. நீ புகழப்பட்டு பூரண வாழ்வை வாழனும்ங்கிறாயா? இல்லே. நாட்டுக்கு எப்படினு உதவனும் என்கிறாயா? எதை செய்யனும் என்பதை நீயே தீர்மானிச்சுக்கோ.

நிகழ்ச்சி உரைப்பவன் : சிமோசோ, உண்மை சகோதரன், மன்னிப்பு உணர்வோடு, காற்றில் அமிழும் அவனது அறிவுரை வார்த்தைகளை இலையுதிர் காலத்து இரவில் போக்கிரியான சென்டாவின் உடலில் தைக்க, தீக் கனவிலிருந்து மீண்டவன் போல், ஒழுக்கத்தின் வழித்திரும்பினான்.

சென்டா : (அவன் மெதுவாக மேலே பார்க்கிறான், செய்த குற்றத்திற்கு இரங்கும் தோரணையில் அவனது தலையை உயர்த்துகிறான். தலையை முழுவதும் உயர்த்திய பிறகு, அவனுடைய கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான். அவனுடைய கைகளை இரப்பது போல் காட்சித் தருகிறான்.)

சிமோசோ : உள்ளபடி நீ அக்கறையோடு இருக்கிறாயா?

சென்டா : இதைவிட வேறென்ன இருக்குது செய்ய. நீ எப்போதுமே எனக்கு நிதானமாக அறிவுரை சொல்றே. ரத்த உறவினர்களைவிட, அதிக அன்போடு, நான் எவ்வளவோ கொடூரமான பேயாக இருந்தாலும், ஏனெனில், நாம் இருவரும் சகோதரர்களாகி சத்தியம் செய்து கொண்டதால், கடைசியா இன்றும் உன் வார்த்தைகள் என்னை மூழ்கடித்து விட்டன. என்னை

முழுதுமே மாற்றிவிட்டது. நான் பொய் சொல்ல வில்லை என்பதை நிரூபிக்க.

(அவன் ஒரு கத்தியை எடுத்து, தன்னை மாய்த்துக்கொள்ள முயற்சிக்கிறான். ஆனால், சிமோசோ, அவனை தடுக்கிறான்.)

சிமோசோ: சென்டா, நீ என்ன சொல்கிறாய்? நான் அவ்வளவு கடுமையான அறிவுரையை கொடுத்தேன் என்றால், உன்னை வாழ வைக்கத்தானே. உன்னை கொல்லவா...நான் இப்படி பேசுவதேன்? நீ உன்னை மறித்துக் கொள்வாய் என கனவு கண்டதாலா? இப்போ திருந்திய பின், எதற்கு இப்படியொரு காரியத்தை நீ செய்ய நினைக்கிறே? எது உன்னை இப்படி செய்யத் தூண்டுது?'

(அவனுடைய கத்தியை முறித்து எறிகிறான்.)

சென்டா: நான் உன்னைப் போல அல்ல. நான் திருந்திவிட்டாலும் யாருக்கும் நன்மையில்லை. இறந்து விட்டால் அது உலகத்துக்கே நன்மை; அதனால் தான் என்னை நானே சாகடித்துக் கொள்ள நெனச்சேன்.

சிமோசோ: மடத்தனமா பேசாதே. உயிரை மதிச்சு நல்ல மனுசனா வாழனும். நீ நேர்மையான வாழ்வு வாழ முடியனு. எங்கே யாவது ஒரு சிறு கடை திறந்தா நேர்மையா வாழலாம் அதை முயற்சி செய். இறந்துவிட்ட உன் பெற்றோருக்கு இது மகிழ்ச்சியைத் தரும். உன் கெட்ட வழிக்கு மறுபடியும் திரும்பாதே!

சென்டா: நான் திருட்டை துறந்துட்டேன். என்னுடைய ஏழை பெற்றோர்களின் வருஷ நிறைவு நாளில் அவங்களுக்காக என் காணிக்கையை செலுத்துவேன். இத்தனை வருஷங்களா அவங்களுக்கு நேர்ந்த துன்பத்துக்கு பரிகாரமா என்னால் தண்ணீர் கொடுக்க முடிஞ்சா, சரி.

சிமோசோ: நீ கற்பனை செய்வதைவிட அதிக இன்பத்தை கொடுக்கக் கூடியதே. நீ மொசுகுக்கி வீட்டிலே இன்று உடைச்சு புகுவதாயிருந்த அந்த எண்ணத்தை அறவே நீக்கியாச்சா?

சென்டா: ஆம். அப்படித்தான்.

சிமோசோ: எனக்கு எவ்வளவு ஆறுதலா இருக்கு உன் வார்த்தைகளைக் கேட்க.

சென்டா: இந்த ஒளியை முன்னதாவே நீ பெற்றிருந்தா உன் துன்பத்தை நான் எவ்வளவோ தவிர்த்திருக்க முடியும்? சகோதரா, என்னை மன்னித்து விடு.

(அவன் அவனது தலையை தரையில் தாழ்த்துகிறான், மன்னிப்பு மனப்பான்மையாக)

சிமோசோ: மன்னிப்பு மூலம் ஒரு நேர்மையான மனிதனுகி விட்டதை இது தெரிவிக்கிறது. நான் உன்னை மன்னிக்கிறேன்.

சென்டா: உன்னோடு வந்து பகூசிமாயாவிடமிருந்து எடுத்துக் கொண்டதை திருப்பிக்கொடுக்க வேண்டுமென விரும்புறேன். ஆனால் என்னிடம் ஐந்து யென்கள் கூட இல்லை. நான் பணம் சேகரிப்பதானு ஒரு வழியிருக்கு. மொசுகுக்கி எனக்கு நேற்றுகொடுக்க முன் வந்த அந்த நூறு யென்களை வாங்கிக் கொண்டா தான்.

சிமோசோ: ' அது மொசுகுக்கி விருப்பமானதால் நீ அதை ஒப்புக்கோ. பிறகு உன்னால் முடிந்தால் இந்த கத்தியை இருநூறு யென்களுக்கு விற்றால், அது முன்னூறு யென்களாகும். அப்படியும் இருநூறு யென்கள் குறைவாகவே இருக்கும்.

சென்டா: இப்போ நான் திருட்டை விட்டு விட்டதால், ஒரு யென்கூட சம்பாதிக்கும் வழி இல்லை.

மொசுகுக்கி: (இடது பக்கமாயிருந்து 'டோரி'யின் பின்னிருந்து தோன்றி) உனக்குத் தேவையான அந்த இரு நூறு யென்களை நான் பரிசா கொடுக்குறேன்.

சிமோசோ: யார், நீ?

சென்டா: மொசுகுக்கி!

மொசுகுக்கி: இது தான் எனது முதல் சந்திப்பு உன்னோடு, சிமோசோ. என்னை நானே தெரிவிச்சுக்குவேன். நான் தான் மோசுகுக்கி. நேத்துதான் எதிர்பாராத வகையிலே சென்டாவிடம் பேசும் சந்தோஷமான வாய்ப்பை பெற்றேன். இன்று மாலை இந்த தலத்து தோட்ட வழியா கடந்த போக வேண்டியிருந்தது. வியாபார விஷயமா பட்டணத்துலேருந்து நான் வீட்டுக்குபோகும் போது யாரோ ரகசியமா பேசறதைக் கேட்டேன். எதுக்காக இப்படி ஏன ஆச்

---

# மழைக் கொடை

## பூ. மாணிக்கவாசகம்

ஓடு ஓடு
இதற்குள்
ஓலை வீட்டின்
மூலை முடுக்கெல்லாம்
வானச் சீசா
வடித்த திரவம்
சுவரின் தாகம் தணித்து
வயிறு பொருமியிருக்கும்;
முகட்டு ஓட்டையை யாவது
கம்மந் தட்டையால் மூடு
உச்சந் தலையைக் காப்பாற்ற.
கொட்டாரத்தில்
ஆயிரக்கண் தாழ்வாரம்
அவிழ்த்துவிட்ட கிடாரி
சுவரின் வயிற்றைச்
சுண்டிவிட்டு விடப் போகிறது
ஓடு, ஓடு
தார்ப்பாய்ச்சல் அவிழ்க்காதே
தலைவிதி விழுந்துவிடும்;
மண்வெட்டி இறக்காதே
மண்டைக் (குக்) கஞம் வந்து விடும்
ஓடு; ஓடு.
ஏதாவது கைப்பக்குவம் செய்.

சரியப்பட்டு நான் நீங்க பேசினது எல்லாத்தையும் கேட்டேன் ஆகவே தான் இருநூறு யென்களை உனக்கு நான் கொடுக்க முன்வந்தேன்.

சிமோசோ : அவளைப்பற்றி எனக்குத் தெரியாது சந்திக்கக் கூடிய பெருமையை நான் பெறவே இல்லே. மேலும் ..

சென்டா : நீ இவ்வளவு பணத்தை எனக்கு கொடுக்க முன் வருவது ..

மொசுகூக்கி : சிமோசோவிற்குரிய நன்றி உணர்ச்சி காரணமாக இச் சிறு உதவி.

சிமோசோ : ஆனல், ஏன் ?

மொசுகூக்கி : இன்னிக்கி ராத்திரி பழைய குரோதம் காரணமா என் வீட்டை உடைச்சிருந்தா; நான் இலகுவா கொல்லப்பட்டிருக்கக் கூடும். எனக்கு அதிருஷ்டம் இருந்தா நான் பலத்த காயத்தோட தப்பிச்சிருக்கலாம். சிமோசாவினுலேயே இந்த அபாயத்திலேயிருந்து தப்பிச்சேன். நான் நன்றி உணர்ச்சியாகவே அந்த பணத்தை கொடுக்க முன் வந்தேன்.

சிமோசோ : அப்படியானு நீ இரு நூறு யென்களை கொடுக்க முடிவு செய்துட்டியா ?

சென்டா : இவ்வளவு பச்சாதாபத்தோடிருப்பாய் என நான் நினைக்கவே இல்லே உன் வீட்டை இன்ன ராத்திரி உடைச்சிருந்தா என் தலை வெட்டப்பட்டு வாழ்வு முடித்திருக்கும்.

சிமோசோ : இதோ பார், தவறுன செய்கை நல்ல முடிவுக்கு இட்டுச் செல்லாது. நீ நல்லது செய்தா உன் தேவை பூர்த்தியாவுது இப்போ உனக்கு பணம் கிடைச்சுட்டுது.

மொசுகூக்கி : என்னைப் பற்றிய எல்லா வதந்திகளை நீ கேட்டு விட்டே என்றே நெனக்கிறேன். ஆனல் உண்மை யென்ன வெனில், நானும் கொடூரமான குற்றவாளிகளின் கூட்டத்து ஆசாமிகளில் ஒருவனுத்தான் இருந்தேன். எனக்குத் தெரியும் நீ என்ன நெனைக்குறேன்னு — வாழ்விலே கெட்ட வழியை ரெண்டு பேருமே ஒழிச்சுட்டீங்க. ஆக, நீங்க என்ன நெனக்கறீங்க என்பதையும் அறிவேன்.

சென்டா : உங்க அதிக பட்ச அனுதாப குணத்தால் நான் மற்றொரு வேண்டுகோளை விடலாம் என கொள்ளலாமா ? நேற்று கொடுப்பதா சொன்ன அந்த நூறு யென்களை, தயவு செய்து நீ எனக்கு கொடுப்பாயா ?

சிமோசோ : தயவு செய்து இந்த கத்தியையும் வாங்கிக்கோ. இதுக்கு மதிப்பு அதிகம் தான். இது இரு நூறு யென்னுக்கு போகும்.

மொசுகூக்கி : நான் சென்டாவுக்கு தருவதா சொன்ன அதே பணத்தை, அதே தொகையை உனக்கு கொடுக்கிறேன். சிமோசோ நான் இரு நூறு யென்களை அந்த கத்திக்காக கொடுத்து வாங்கிக்கிறேன், அதுவே உன் விருப்பமானல்.

சிமோசோ : உன் பெருந்தன்மையால் சென்டாவிற்கு அந்த ஐந்நூறு யென்களை முழுமையா திருப்பிக் கொடுக்க முடியும். பசிகூமாயாவை கொள்ளையடிச்சு பறிச்ச பணத்தின் பாகமா என் பங்கா வாங்கினதை இப்போ முழுமையா திருப்பிக் கொடுக்க முடியும் உன் பெருந்தன்மையாலே. பகூசிமாயாவிற்கு நான் கொடுக்க வேண்டிய என் பங்கை வீட்டுக்கு போய் எடுத்து வருவேன். கொடுக்க வேண்டிய ஆயிரம் யென்களை திருப்பிக் கொடுத்துடுவோம்.

சென்டா : ஒரே இரவிலே இவ்வளவு பணத்தையும் நம்மால் காண முடிஞ்சுதே. ஏவ்வளவு ஆச்சரியம் !

மொசுகூக்கி : குற்றம் செய்றதை விட்டு விட்டதால் சொர்க்கம் கொடுக்கும் பரிசு இது.

சிமோசோ : அந்த ஆயிரம் யென்னை நெடு நாட்களா கஷ்டப்படும் பகூசிமாயாவிற்கு கொடுத்தான பிறகு ..

சென்டா : நாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் நமது கொள்ளை பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லி பாவமன்னிப்பு கேட்போம்.

மொசுகூக்கி : நிச்சயமா உங்களுக்கு தண்டனை குறைவாகவே இருக்கும் என நம்புறேன்.

சென்டா : இந்த வார்த்தைகள் பத்திரிகையில் தோன்றினு அது திருடர்களுக்கு ஒரு உதாரணமா அமையும்.

சிமோசோ : எல்லாவற்றிற்கும் மொசுகூக்கிக்கு நாம் கடமை பட்டவங்க, சந்தேகமில்லாமே.

மொசுகூக்கி : நானும் ஒரு காலத்தில் திருடனுக இருந்ததால் தான் உனக்கு உதவறேன்.

(நாடகத்தில் மற்ற வசனங்கள் செய்யுளாக அமைந்துள்ளன. குறைத்துப் பேசுதல், ஆத்திரமாகச் சொற்பொழிவாற்றுதல், கூச்சலிடுதல்.)

சென்டா : இங்கே கூடியிருக்கும் நாங்களோ ?

சிமோசோ : திருடர்கள், சீறும் அலை சுருண்டு விட்டது போல்,

சென்டா : குற்றம், கடலோர மணற்பாங்கிலிருந்து, திறந்த கடலிலிருந்து,

மொசுகூக்கி : மீண்டும் அலை திரும்புதல் போல் நல்வழிக்கே வருதல் போல்.

நிகழ்ச்சி உரைப்பவன் : அவர்கள் மகிழ்வுறுகின்றனர், மென்மையான வழிக்குத் திரும்பியதால், சூரிய ஒளிக்கு முன், மாசற்ற நேரத்தில்.

(குழலோசையும், மத்தள ஒலியும், மணியோசையோடு இழைய : அவர்கள் எல்லா தோற்றங்களையும் உருவாக்கிக் காட்டுகின்றனர் )

அந்த இசை 'யாசுகுனி' தலத்தில், -

சிமோசோ : ஒவ்வொரு நாளிலும் தூய்மைப் படுத்தும் சடங்கு அது என்பது அர்த்தம்.

சென்டா : சேவலின் ஒலி இருளை ஓட்டுகிறது.

சிமோசோ : உதயத்திற்கு முன் துணிவாக.

மொசுகூக்கி : வானம் வெளுக்கிறது. உதயம் வந்து விட்டது.

(மணியோசையும், தட்டும் மர ஒலியும் கேட்கிறது. 'கபூக்கி' திரை விழுவதன் அறிகுறியாக.)

# புதுக் கவிதை — உருவ ஆய்வு 2

சி. கனகசபாபதி

இலகு செய்யுள் முறையானது முற்றும் செய்யுள் பாணியிலிருந்து விடுபட்டு அல்லது கட்டற்று இருப்பதில்லை மரபான யாப்புச் செய்யுள் பாணியிலிருந்து மாறியிருப்பதால் இந்த இலகு செய்யுள் முறைக்குச் செய்யுள் பாணியே கிடையாது என்று சொல்லுவதற்கில்லை. பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் இது ஒரு புதுமையான செய்யுள் முறை என்று தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் செய்யுள் முறை ஒரு புதுப் பாணி. இலகுவாக, அல்லது விடுபட்டதாக, அல்லது கட்டற்றதாக இருப்பது இந்தப் புதுச் செய்யுள் பாணியின் தனித்தன்மை இந்த இலகுத் தன்மை அல்லது விடுபட்ட தன்மை அல்லது கட்டற்ற தன்மை அல்லது சுயேச்சைத் தன்மை எதிலிருந்து இலகுவானது. விடுபட்டது, கட்டற்றது சுயேச்சையானது என்றால் சந்தைக் கவிதை முறையிலிருந்து, சந்தக் கவிதை ஓசைக்காகச் சொல் எடுத்து ஓசைக்காக எதுகை மோனைகள் உண்டாக்கி, ஓசைக்காகச் சொல் நயங்களைத் தர்க் கூடியது என்பதை நாம் நன்றாக அறிவோமே அதிலும் அளவு மீறிய சந்தக் கவிதை என்றால் அது வெற்று ஓசைதான். மொத்தத்தில் சந்தக் கவிதை ஓசையை முன்னிலையில் ஒலித்துக் கொண்டு எழுதப்படுகிற ஒரு வித்தை.

புதுக் கவிதை நாம் இலக்கணத்தில் தெரிந்திருக்கிற பாவோசைகளை அடிப்படையாகக் கொண்டு வருவதல்ல. ஆயினும் இலகு செய்யுள் முறையிலான புதுக் கவிதைக்கு ஒரு ஒலியமைப்பு இருக்கிறது. அதையே 'காடென்ஸ்' அல்லது 'குரல் இறக்க ஏற்றம்' என்று குறிப்பிடுகிறார்கள். நாம் வழக்கமாகக் குறிப்பிடுகிற பாவோசைக்கும் இந்தக் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்புக்கும் வேறுபாடு இது தான். பாவோசையானது ஒரு குறிப்பிட்ட பாவின் சீர் தளை அடியின் அடிப்படையில் சார்ந்து வருவது ஆனால் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்பு இத்தனைச் சீர்கள், இந்தத் தளை, இத்தனை அடிகள் என்ற கணக்குக்குக் கட்டுப்பட்டதல்ல. அது மன எழுச்சிகளுடனும், சொற்களின் ஓட்டத்துடனும் தானும் எழுந்து அவைகளுடன் தானும் வீழ்ந்து, தனக்கென்று இந்த விதிபெற்று, தான் நிரந்தரமான எந்த விதிகளையும் பெறாமல் வருவதாகும்.

இங்கே நீங்கள் புதுக் கவிதைக்கும் காட்சி மரபுக்கும் இலகு செய்யுள் முறைக்கும் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே போல இலகு செய்யுள் முறைக்கும் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்புக்கும் நமது இருபதாம் நூற்றாண்டின் பேச்சு வசனத்துடன் நெருங்கிய இணக்கம் உண்டு.

நாம் மேலே பார்த்து வந்த உதாரணங்களைக் கொண்டே இந்தத் தொடர்புகளை விளக்கிக் கொள்வோம்.

ந. பிச்சமூர்த்தியின் 'புதுமைக்குப் பயணம் கவிதையில் மேற்கைப் பாடிய ஒரு பகுதியைப் பார்த்தோம் அல்லவா? அதில் முதல் இரண்டு வரிகள் இவை :

''மேற்கே நடந்தேன்,
நடந்தேன் நடந்தேன், நடந்தேன்...''

எந்த இலக்கண யாப்பிலும் பாவோசையிலும் அடங்காத வரிகள் இவை. ஆனால் இவை செய்யுள் பாணியில்தான் ஒலிக்கின்றன; நடக்கின்றன, இந்தச் செய்யுள் பாணியே இலகு செய்யுள் முறை அல்லது சுயேச்சா கவிதைப் பாணி என்பது இந்த இரண்டு வரிகளும் பேசுகிற வசனத்திலிருந்து அமைத்தவையாகவும் ஒலிக்கின்றன; தெரிகின்றன. முதல் வரியில் ஒரு 'நடந்தேன்' வந்து செய்தி அறிவிப்பாக ஒலிக்கிறது. இதன் ஒலி அமைப்பு 'குரல் இறக்கம்' உடையதாக இருக்கிறது. இரண்டாவது வரியில் 'நடந்தேன்' மூன்று முறை வந்து 'குரல் ஏற்றமாக' ஒலிக்கிறது. மேலும் இரண்டாவது வரியில் 'நடந்தேன்' மூன்று முறை வருவது, சொற்களின் ஓட்டத்துடனும் மன எழுச்சிகளுடன் வரக் கூடிய 'காடென்ஸ்' என்ற குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்புக்குப் பொருத்தமாக இருக்கிறது.

முதல் இரண்டு வரிகளுக்குப் பிறகு தொடர்ந்து வருகின்றன எட்டு வரிகள்,

"இதுவா மேற்கு ?
அவியும் உடு,
குலையும் இருள்,
வீசும் இளமை
ஏறும் வெறி,
பாவி ரவி சவுக்கடியில்
சிதறும் சிவப்பு !
இதுவா மேற்கு ?"

மொத்தம் பத்து வரிகளும், ஒன்று சேர்ந்து ந. பிச்சமூர்த்தியின் 'புதுமைக்குப் பயணம்' கவிதையில் ஒரு தனிப் பத்தி. புதுக் கவிதையில் பத்திப் பிரிவுகளும் உண்டு. மேலே எடுத்துக் காட்டிய எட்டு வரிகளில் முதலிலும் கடைசியிலும் ஒரு கேள்வி இரண்டு சொற்களில் வருகிறது. எப்

போதுமே வேகமான கேள்வி ரொம்ப சுருக்கமாக் வெளியிடப்படுவது தான் பேச்சிலும் இயற்கை. வேகமான கேள்வியின் மன எழுச்சிக்குத் தக்கபடி 'இதுவா மேற்கு ?' என்ற குரல் இறக்கம் ரொம்ப பொருத்தம். அடுத்தும் வரி தோறும் இரண்டிரண்டு பெரும்பாலும் மூன்றெழுத்துச் சொற்களில் குரல் இறக்கமே பொருத்தமாக இருக்கிறது. ''அவியும் உடு, குலேயும் இருள்' என்றெல்லாம் குரல் இறக்கமாகத் தொடர்ந்து முடிகிற வரிகளில் இவ்விடத்திலுள்ள வேகமான ஆத்திர மன எழுச்சிக்கு அழகாக இணக்கம் ஆகிறது

[ 2 ]

தர்மூ சிவராமுவின் 'எரிகல்'லில் மொத்தம் ஒன்பது வரிகள். படிமவியலுக்கு ஏற்ற குறுகிய பாட்டு உருவம்.

''வெளிவானம் எரிகல்லில்
கிழிபட்டுத் தெரிகிறது:''

இந்த முதல் இரண்டு வரிகளில் எரிகல் வானத்தைக் கிழித்து விழுகிறது தெரிகிற ஒரு காட்சி. இதிலுள்ள 'தெரிகிறது' என்ற சொல் பேச்சு வசனத்தின் தர்க்கம். எரிகல் விழுகிறதுக்குத் தக்கபடியே சொற்களின் விழுகிற ஓட்டம் 'எரிகல்'லில் வருகிறது இதனால் இதனுடைய 'காடென்ஸ்' நிறைவேறுகிறது.

''வெளிவானம் எரிகல்லில்
கிழிபட்டுத் தெரிகிறது :
வானக் கடல் முத்து
விழுகிறது; இருட்கரியின்
வயிரம் உதிர்கிறது...
இயற்கை தன் இருளை மொழி
பெயர்த்து உதிர்த்த கவி ..
உதரக் குடல் நாடி
உதிரும் சிறு குழவி...''

தர்மூ சிவராமுவின் இந்தக் கவிதையிலுள்ள குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்பை உணர மறுபடியும் இங்கே இதைப் பார்க்கிறோம். எரிகல் விழுகிறதுக்குத் தக்கபடியே சொற்களின் விழுகிற ஓட்டமும், அத்துடன் சொற்கள் உதிர்வுதோடு ஒன்றிவருகிற உதிர்கிற மன எழுச்சியும் ரொம்ப அழகாக இதில் அமைந்திருக்கின்றன. இதைப் போய் மரபான யாப்புருவத்தில் எழுதவில்லையே என்று குறைப்பட என்ன இருக்கிறது? மேலும் இதன் கவிஞரின் நடப்பியல் அழகுப் பார்வை மனசுக்கு இன்பம் தருகிறது. முதல் இரண்டு வரிகளுக்குப் பிறகு உருவாகிற படிமக் காட்சி அகக் கண்ணுக்கு அழகின்பம் தருகிறது.

தர்மூ சிவராமுவின் 'மின்னல்' என்ற ரொம்ப குறுகிய இன்னொரு கவிதை படிமவியல் பாங்கில் உருவாகி, இலகு செய்யுள் முறையையும் காட்சி மரபையும் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்பையும் பொருத்தமான அழகுடன் பெற்றிருக்கிறது.

''ககனப் பறவை
நீட்டும் அலகு
கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை
கடலுள் வழியும்
அமிர்தத் தாரை
கடவுள் ஊன்றும்
செங்கோல்''

ஒரு நிறுத்தக் குறியும் பெறாத ரொம்பவும் குறுகலான கவிதை இது. மின்னல் ஒன்று வெட்டினால் எங்கே நிறுத்தம் இடையில் ஏற்படும்? மின்னலுக்கு ஒரே வீச்சுதானே. எனவே தான் நிறுத்தக் குறியே இந்தக் கவிதையில் இல்லை:

மின்னல் வீச்சைக் காட்டுகிற சொற்களின் வீச்சைப் புறக்கண்களில் பார்க்கிறோம். இதுவே தான் இதனுடைய 'காடென்ஸ்' என்ற குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்பு. புதுக் கவிதைத் திறனாய்வில் இலக்கிய மதிப்பு உயர்ந்தது. தர்மூ சிவராமுவின் 'மின்னல்.' இதைப் போய் இலக்கணப் பாவோசையில் எழுதினால், காட்சி மரபின்படி படிமப் பாங்கு இவ்வளவு அழகாகக் கிடைக்காமல் போகும்; அகக்கண்ணுக்கு மின்னல் தோற்றம் இவ்வளவு ஊன்றிக் கிடைக்காது.

[ 3 ]

சி மணியின் 'நரகம்' மில் மரபான யாப்புருவ ஒலிநயத்தை அங்கங்கே கேட்கிறோம். ஏனென்றால் 'நரகம்' மதுரைக் காஞ்சியில் வரும் வஞ்சிப்பா அடிகளைப் பெரும்பாலும் மற்றும் சில இலக்கிய வரிகளை ஒரு சில இடங்களிலும் நமக்கு நினைவூட்டுகிறது. ஆங்கில அமெரிக்கத் தற்கால இலக்கியத்துக்கு டி. எஸ். இலியெட்டின் 'பாழ் நிலம்' என்னும் நீண்ட கவிதை தாக்கம் கொடுத்திருக்கிற மாதிரி சி மணியின் 'நரகம்' தற்காலத் தமிழ்க் கவிதைக்குத் தாக்கம் கொடுக்க உரியது. 'நரகம்' தொடங்குகிறபோது வருகிற வரிகள் இவை.

''தனிமை, விழியில்
விழுந்த விழுந்த இனிமை,
இடைவேளை யின்றி யின்றி
ஆசையதை நீட்ட நீட்ட,
கூடற்கனவைக் கூட்ட கூட்ட,
சகதி கிடைத்த கொசுவாய்
வஞ்சிக் குலேயைப் பெருக்க பெருக்க,''

இந்த வரிகள் பாலுணர்ச்சித் தடுமாற்ற மயக்கத்தின் மன எழுச்சிக்கு ஏற்றபடி 'காடென்ஸின்' அமைப்புடன் ஒலிக்கின்றன.

ந. பிச்சமூர்த்தியின் 'பூக்காரி'யில் மழையும் குளிருமான நேரத்தில் பூக்காரி பூ விற்காததைப் பார்த்து வீடு திரும்பியதைப் பாடுகிறார் :

''பூக்காரி பொங்கும் குரல்
பெண்களை எழுப்பவில்லை.
சாரலின் கடுஞ்சினத்தில்
பூமோகம் ஆடவில்லை.

பூக்காரி குரலினோடு.
கூடிற்று மழையின் கண்ணீர்.
பூக்காரி பொட்டுக்கூடை
திரும்பிற்று வீடுநோக்கி...''

இங்கே ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் காட்சி உயர்ந்த படிமமாக, ஏமாற்ற மன எழுச்சிக்குத் தக்கபடியான 'காடென்ஸ்' என்னும் குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்புடன் உருவாவதை நாம் பார்த்து ரசிக்கிறோம்.

இப்படியே புதுக் கவிதைக்கு உரிய ஒலியமைப்பையும் உருவத்தையும் குறித்துச் சொல்லிக் கொண்டே போகலாம். கு. ப. ரா வின் 'என்ன தான் பின்?' என்னும் முழுக் கவிதையை ஒலியமைப்பும் உருவமும் காட்ட எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

'காதலென்றால் கேலி செய்கிறாயே—
எதற்காக ?
கவிதையைக் கள்ளச்சொல் என்கிறாயே—
வேண்டுமென்று தானே ?
நான் துதிக்கிறேன் என்று தானே ?
இருக்கட்டும்.
நமது இன்பத்து ஏகாந்த இரவின் இறுதியில்,
பிறை வெளுத்த பின் மாலையில்,
இருள்வெள்ளம் வடிந்த வைகறையில்,
ஓவிய மூட்டும் உன் ஒளிக்கரங்களை விட்டு
நான் பிரிவினை கொள்ளும் போர் வேளையில்,
என் கண்களைக் கலக்குவதென்ன -
காதலல்லாமல் ?
அந்தக் கனவழியும் பொழுதில்.
உன்வாயின் வார்த்தை வனப்புத்தா
—னென்ன கவிதையல்லாமல் ?'

காதலையும் கவிதையையும் தன் காதலி தன்னிடமே கேலி பேசக் கேட்ட காதலன் கூறுவதாக அமைந்தது இந்தக் கவிதை. எந்த இலக்கண மரபான யாப்புருவத்திலும் இது அடங்காது.

காதலனின் பேச்சாகவே, ஒரு காதல் தன்னுணர்ச்சிப் பாட்டாகவே இதை முடித்திருக்கிறார் கு. ப. ரா. இதன் உருவத்தைப் பார்த்தால், பேச்சு வழக்கின் ரசக்கலவை சேர்ந்து, பழைய இணைக்குறள் ஆசிரியப்பா என்னும் யாப்புக்கு உட்பட்ட உருவத்திலிருந்து நெகிழ்ந்த வளர்ச்சியும் கூடி, காதலைப்பாட இது ஒரு புதுக் குரல் என்று சொல்லும்படி வந்துள்ளது இந்தக் கவிதையைப் படித்தவுடனே புலனின்ப உணர்வில் ஈடுபாடு ரொம்ப கொண்டு படைத்துள்ள கவிஞர் கு. ப. ரா. என்று தெரிகிறது. மேலும் 'என்னதான் பின்' கவிதையின் உருவத்தைப் பார்த்தால், ஒரு அங்கக் கட்டான படைப்புத் தன்மை தெரிகிறது.

இதில் கு. ப. ரா. வின் ஐந்து சீர் வரி குறிப்பிடத் தக்கது.

''காதலென்றால் கேலிசெய்கிறாயே எதற்காக ?
கவிதையைக் கள்ளச்சொல் என்கிறாயே
வேண்டுமென்று தானே ?''

மேலே குறித்த ஐந்து சீர் வரிகள், காதலனின் மனநிலையிலுள்ள மென்மை அசைவுக்குத் தக்கபடி குரல் இறக்க ஏற்ற ஒலி அமைப்பு கொண்டிருக்கின்றன.

தி. சோ. வேணுகோபாலனின் 'கவி—வேதனை'யில் ஒரு பத்தியில் இந்த வரிகள் வருகின்றன.

''எழுத்தாளன் எங்கே ?
கேட்கப் போனேன்
நடப்பூர் தாண்டி
நினைவூர் கடந்தபின்
கற்பனைத் தோப்பிலே
கள்ளுக் கடையில்
கவிஞனைக் கண்டேன்...''

இதில் நடப்பூர் தாண்டி, நினைவூர் கடந்தபின், கற்பனைத் தோப்பிலே கள்ளுக் கடையில் என்ற சிறிய வரிகளைப் படிக்கிற போது, நடந்து சென்ற தூரம் பற்றிய உணர்வு அழகாகப் புலப்படுகிறது. இதில் நடந்து சென்ற தூரம் பற்றிய உணர்வைத் தருகிற 'காடென்ஸ்' முறை புதுமையானது.

---

# வெள்ளம்

## வல்லிக்கண்ணன்

ஆற்றில் புது வெள்ளம்—
எற்றிடும் அலைகள்
மேற்செல்லும் சுருள்கள்
நுங்கும் நுரையுமாய்
பொங்கிடும் வெள்ளம்.

சுழலுது, சுருளுது,
மோதுது, சாடுது,
ஓடுது ஓடுது
ஓடுது வேகமாய்
எதையோ முடித்திடல் போலே !
முடிப்பது எதுவுமில்லை
முடிவோ கடலிலே !

பட்டணத்துப் பாதையிலே
புரண்டிடும் ஜனவெள்ளம்—
எத்தனை மனிதர்கள் !
எத்தனை எத்தனை ரகங்கள் !
தம்மிலே தாமாய்,
நினைவும் கவலையும் தமக்கே யாக்கி,
மிஷின் யுகத்தின்
அவசர நிழல்களாய்
அசைந்திடும், நடந்திடும்,
விரைந்திடும் உருவங்கள் !
பரபரத்திடும் கும்பல்
இன்று போல் நாளை—
நேற்றுப் போல் இன்றென
ஓடியும் சாடியும்
முடிப்பது என்னவோ ?

வாழ்க்கையே வெள்ளம்.
மரணமும் கடலோ ?
மரணத்தைக் கூடிட
விரைதலும் வேண்டுமோ ?

# முதலில்லா வியாபாரம்

## கம்பதாசன்

ஒன்று...! பத்து ..! நூறு...!
என்று சொல்லி...
நதிக் குமிழி துள்ளி
வந்தான்--கரும் பலகை—அந்தி அழகு...
அண்டும் இருளை
தந்தான்—ஒளி புதைந்த விதை !...

சின்னஞ் சிறு பையன்
மின்னல் துடி மெய்யன்...
—கரும் பலகை
ஒளி புதைந்த விதை...

கண்ட
சிட்டின்...பேறு...!
தந்தை எள்ளி...மரம் நிழல் தள்ளி...
சொல்வான்—கரும் பலகை
என்றான்—முதல் உளது அதை
கண்ணீர்க் கோடென கலைப்பாய்...!

என்ன ?
நின்றான் பையனும் மலைப்பாய்...
ஏன் ? கேள்வி ..தூக்கிடும் கொக்கி !
வான் ! மீட்சி...பதில்...வெள்ளம்...நாய்
நாக்கி,

ஏன் ?

வீண் !

பேன்கள் பல பிடிக்குமோ,...!
அழுக்கு மயிறு,
தலை யிருந்தால் ?
மீன்கள் பல துடித்திடா...!
கரிய இரவு,
நிலை அழிந்தால் !

தனித்த ஒருவன்,
பல அறிவிலிகளை,
தளையிடும் சங்கிலி
வளையம், அறுந்திடும் !
மனிதத் தலைமை,
இயற்கையின் கனிவளம்
சுரண்டிடும்,

சிந்தனை;
கலை...யம்...! உடை ந் திடும்...!

ஒரு பசி
குறிப்பு,
பல வயல்
விளைப்பு...!

ஒரு வாள்
சுழற்சி,
பல தலை
விழுச்சி...!

ஒரு முகில் அழிவு...?
பல துளி பொழிவு !

நதி வொன்றும் !
—அதில்...?
மதி வொன்றும் !
—விதி...?
ஒன்று...!
—கரு மாதம்
பத்து...!
—வதி ஆண்டு
நூறு...!
ஒன்று...!
—இலாத
அண்டம் !
—துணைரெண்
டண்டம் !
புரிந்ததா ?
குறித்ததா ?

ஆண்டவன்,
இல்லா...?
ஆண் ! பெண் !

அடுக்களையில் யார் ?
அடுப்பில் என்ன ?

.. எறும்பு அள்ளி இருதலை
கொள்ளி !—இல்லை ?

தூண்டோளி
இல்லா
காண் கண்...!

எழுதிய பலபம்
இல்லை !—கரும்பலகை
மழுப்பிடை,—எணின் வகை
அப்பா !
மகனே !

அப்பா !
ஒன்று.. பத்து...நூறு...!

மின்னில் இடிவெளிப்பாடு !
அமைதியில் சவ கூப்பாடு...

அடடே !
விபசாரியா ?
நான் !
இருதலைக் கொள்ளி !—விதை—கனி—நடு
மலர்கள் ! இரு கொள்ளி
எறும்பு, நான்!... யார் ?

அம்மா,
நீ, நம்பிக்கை !

ஆம் !
சதி, சத்தியம் !
மெய் !

ஆம் !
விருந்தினர் பலரை,
உபசரித்தனன்:
பலன் பரிசிழைத்தனன் !
குடித்தனம் !—படி அறம் !—இல்லறம் !—
யான் ?

இலைகள் பல வளர,
மலர்கள் பல மலர,
வளைந்த கிளை நீ,
அம்மா !

ஆம். மகனே...!

கனிகள் பல உதிர,
விளைந்த மரம் நீ...!

ஆம். துணைவா...!
தேங்கிய...
பழமைக் கடலை விடுத்து,

விசிறிய...
புதுமைக் காற்று வருடிய
பாடிய—வீணை !—நாடிய
மரம்—நான் ?
நவயுக நங்கை !
ஏன் ?

எனினும்,
நிழலுன் காலடி.
நெருங்கும் பசுக்களின்
இருக்கை;
அசை !
வளரும்
பசிய புற்களின்,
மரபு !—வளர் வழக்கம் !—மரபு...
கூண்டு—கலைகள்;
வலைகள் பின்னிடுமே...!
தலைமேல்
பறக்கும் சிறகால்,
சிட்டுக்கு,—கட்டுக்கு,—புதை குழி...
எண்ண...வழி,—
வெட்டுமின் தகர்க்கும் திரை !—பழி...!

ஆம்—துணைவா !—மகனே—துணைவன் !
துணைவனே மகனே...!
ஆம்—ஆம் !
அலைகள் பல;
பல, சுறுமீன் பற்பல; துடிப்பு !...
சருகலைப்பு...!

தொடர்ந்து படர்ந்து...
தியானம்..!
வானம்...!
ஈனம்...!
அணி வகுத்து,...பணி நெளித்து...
பிறை நகைத்தது...!
கரையைக் கரைத்தது..!
ஆம் !
கரையைக் கரைத்தது...!
விதியை அழித்தது ! விபசாரம் புரிந்தது !...
ஆம் ! ஆம் நிலைத்தது

விழித்தது...ஆமாம்..

சத்தியம் !

ஒன்று !...

......?

.........??

# தேட்டம்

## ஹரி சீனிவாசன்

கவிதைக்குப் பொருள் தேடிக்
கடற்கரையை அரித்தான்
கவிஞன்.

தாக்குந் திவலைகள்
மூக்கு கண்ணாடியில்
படுதாப் போட்டன
நாக்கில் உப்பு நெருடியது
கவிதை மீன் வேண்டி
கண்வலை வீசினன்.

சுருளும் சிகையாய்
அலையும் வலைஞர்
ஏறும் பொடுதாய்ப்
புரளும் படவும்
ஈரும் பேனும் அதிற் சில
நாறும் மீனும் நறுமணக் கவி ?
நாட்டத்தை விரட்டினன்.

தொடுவான் மேகம்
நிலவின மடியைப் பிடித்திழுக்க
மின்னல் விளக்கு
பிரகிருதியின் கண்ணையிமைக்க
கவிதைக் குமரியின்
இன்மநுனி வேட்டான்.

விசும்பை விளிம்பிட்டு
ஆழத்திருத்திக் காரிருள் சுற்றிய
பஞ்சப் ரதேசத்துப் படுகுழிக் கிணறு
பீஞ்சிற் கிழந்த வஞ்சியர் நயனம்,
இதழோரத்திலே—
வைடமீன் பி குறைச்சல்
வாயெல்லாம் புண்,
முலையாழத்திலே—
பிள்ளைக்குத் துடிக்கும்
பாசச் சதை முஷ்டி,
விழியீரத்திலே—
போன புருஷன் காணுக் கவலை,
இமைப்பை யிழந்த
இருவிழி யோட்டை
இதுவோ கவிதை
உயிர் விக்கி வேறிடம் சென்றுன்.

பாலரிடையிற் பார்க்கவும் கூடுமோ
என்று தன் காலை எடுத்துப் போட்டான்.

மாபலிக் கவியீடம்
பிரச்னைக் கதையாய்
பல்லிடை உடைபடாப் பட்டாணி விற்று
யாசகம் கேட்கும்
வாமனரூபம்
பாலைக் காட்ட ? க்கோவணமூண்டு
தாயர் அடைப்ப காலந் திறந்திடத்
தேயக் குழைந்த வயிறினரே
தம்பசி போக்கப் பிஞர்க்கூண் வழங்கி
அங்கை வெறித்த நோக்கினரே
நெய்சுடு பண்டம் கைகொடு போந்து
பைதவழ்ந் தலைத்த தோளினரே
கடற்கரைப் பாலரிடம்
கடலை சுண்டல் கிடைக்கும்
சுண்டல் கவிதையாகுமா ?

தன்னிரக்கம் தன்னைத்தள்ள
கரையிற் பறந்தான்
கால் மணலில் புதைந்தது
பிள்ளையலைக்கு முடியிடம் துறந்து
அப்பன் அலை வந்து
தடவிப் போய் அழிந்தது
மண்வண்ண நண்டுகள்
மண்ணுள் ஒளிந்தன
பொன் வண்ணச் சூரியன்
புகையாய்க் கரைந்தான்
பின்புறந் தட்டிப் புறப்பட்டன
வாழ்வின்
இன்ஃபன்ட்ரி
கார்கள் பரந்தன
கால்நடை போட்டன
நாளைப் பிறப்புக்கு நாற்று நட,
இன்று
ஆளைக் கொல்லும் இரவுக் கனவுக் குகையுள்
புகலிடம் தேடிப் போந்தன
இருள் மலைப் பாம்பு
சுகமாக இறுக்கி நெருக்கியது.

வழிகாட்ட விளக்கற்ற கவிஞன்
தடுமாறி யலைந்தான்.

மோனத்தைக் கொண்டு
ஞானத்தைத் திணித்து
முள்முனை கொண்டு
மானத்தைக் கிழிக்கும்
கானத்துட் கபோதி
கால் விழியால்
தட்டித்தடவி எட்டி நடைபோட
பற்பல வண்ணச் சிப்பித்தூள்கள்
கப்பிக் கிழித்துக் கண்ணையவித்தன.

கடற்கரைப் பரத்தை
மணற்கன்னம் குழிய
அலையுதடு விரித்தாள்
நுரைப்பல் விளித்தாள்
கெக்கலி கொட்டிக் கர்ஜித்து நக்காள்
இடுப்பொடிந்த கவிஞன் காதும் ஒட்டை
தவழ்ந்தான் ஊர்ந்தான்
நெளிந்தான்.

இருள் அவனை விழுங்கிய
ஹேவ் சத்தம் கேட்டியோ ?

# படைப்பாளர் பிரச்னைகள்

### வல்லிக்கண்ணன்

"படைப்பாளிகளுக்கு பிரச்னையே இல்லையா ? நம் இலக்கியம் வளர்ந்து இருக்கிற விதம், வளர வேண்டிய விதம், அதன் நிலை பற்றி ஒப்பு நோக்குதல், காலத்துக்கு ஏற்ப படைப்பிலே ஏற்படும் திருப்பங்கள், செய்யப்பட்டுள்ள சாதனைகள் இவைகளை எல்லாம் ஆள் பார்க்காமல், அனுதாப, அபிமானம் பார்க்காமல் தரம் மதிப்பது, தரம் ஏற்றத்தக்க வழிவகைகளை சிந்திப்பது, கையாள்வது, பிறமொழிகளுக்கு நம் இலக்கியத்தரமான எழுத்துக்கள் போகச் செய்யத் திட்டமிடுவது. பிறமொழிகளின் தரமான இலக்கியங்கள் கிடைக்கச் செய்வது போன்றவைகளை எல்லாம் கவனிக்க வேண்டாமா ஒரு எழுத்தாளர் சங்கம் ?"

('எழுத்து'—97)

இவ்வாறு 'எழுத்து' சரியான சமயத்தில், எழுத்தாளர்களின் கவனத்தை சரியான திக்கிலே திருப்ப முயன்றிருக்கிறது. இது குறித்து "படைப்பாளிகள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்" என்றும் 'எழுத்து' கோருகிறது.

இவை எல்லாம் படைப்பாளிகளும், படைப்பு இலக்கியத்தில் ஆர்வம் உடையவர்களும் சிந்திக்க வேண்டிய முக்கிய பிரச்னைகள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த விதமான முக்கிய விஷயங்களில் தங்கள் கவனத்தையும் சிந்தனையையும் ஈடுபடுத்த வேண்டிய படைப்பாளிகளும், படைப்பு இலக்கியத்தை வளர்க்க வேண்டும் எனும் ஆசை பற்றி எழுதத் தொடங்குகிறவர்களும் வேறு அநேக அடிப்படைப் பிரச்னைகளை எண்ணிக் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்—அப்படிக் குழப்பமுற வேண்டிய நிலையே இந்த நாட்டில் இப்பவும் நீடிக்கிறது—என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த வருஷ ஆரம்பத்தில் நான் அநேகம் எழுத்தாளர்களை சந்தித்துப் பேச நேரிட்டது. எனக்கு வருகிற கடிதங்களில், அவ்வப்போது சில எழுத்தாளர்கள் மனம் திறந்து கூறும் ஏக்கங்களும் குறைபாடுகளும் கலந்து காணப்படுகின்றன. இவற்றின் மூலம் எல்லாம் படைப்பாளரை நம் நாட்டில் எதிர்நோக்கி நிற்கின்ற—அச்சுறுத்துகின்ற என்று கூடச் சொல்லலாம்—எத்தனையோ அதிமுக்கியப் பிரச்னைகளை நான் அறிந்து கொள்ள முடிகிறது. நானும் பல விஷயங்களை உணர்ந்துதான் வந்திருக்கிறேன்.

'எழுத்து' குறிப்பிடுவது போல, "சுத்த படைப்பாளிகளுக்காக மட்டுமே ஒரு தனிச் சங்கம் அமைத்துக் கொள்ள வேண்டிய காரியத்தைச் செய்ய" முயல்வதன் மூலமோ, அல்லது அப்படி ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்வதனால் மட்டுமோ, இப்போது நிலவுகிற—இன்னும் நீடிக்கப் போகிற—பல முக்கியப் பிரச்னைகளுக்கு முடிவு கண்டுவிட இயலும் (அல்லது, முடிவு காண்பதற்கு உரிய வழிவகைகளைக் காண முடியும்) என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆனாலும், படைப்பாளிகளும் (கிரியேடிவ் ரைட்டர்ஸ்), கனமான ஆழ்ந்த விஷயங்களைச் கூறும் இலக்கிய முயற்சிகள் (ஸீரியஸ் லிட்டரேச்சர்—எக்ஸ்பெரிமென்டல் ரைட்டிங்ஸ்) போன்றவற்றில் ஆர்வம் உடையவர்களும் அவ்வப்போது சந்தித்து, உரையாடி, அபிப்ராயங்களைப் பரிமாறிக் கொள்ளவும் பிரச்னைகள் பற்றி சிந்திக்கவும் சிறு சிறு கூட்டங்கள்—நண்பர் செல்லப்பா ஏற்பாடு செய்த 'எழுத்து அரங்கம்' போன்றவை—உதவக் கூடும்.

சமீப காலத்தில் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட பல பிரச்னைகளில் சிலவற்றை மட்டும் இங்கே அறிமுகம் செய்ய விரும்புகிறேன்.

படைப்பு இலக்கியம் தேக்கமுற்றுக் காணப்படுகிறது. படைப்பு முயற்சிகள் (கிரியேடிவ் லிட்டரேச்சர், எக்ஸ்பெரிமென்டல் ரைட்டிங்) தமிழில் வேகமாகவும், பெரும் அளவிலும் தோன்றவில்லை. படைப்பாளிகள் சோர்வுற்று, செயலூக்கமின்றிக் காணப்படுகிறார்கள். படைப்பாளிகள் என்று கவனிப்புப் பெற்றவர்களில் சிலர் எழுதாமலே இருக்கிறார்கள். சிலர் அபூர்வமாகத்தான் எழுதுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன ?

இது உரக்க சிந்திக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம் என்றே நானும் கருதுகிறேன். படைப்பாளி ஏன் அதிகம் அதிகமாக, வேகம் வேகமாகப் படைப்பதில்லை என்பதற்கு ஒவ்வொரு படைப்பாளியைப் பொறுத்த வரையிலும் தனிப்பட்ட வெவ்வேறு காரணங்கள் இருக்க முடியும்—இருக்கின்றன.

இந்தப் பிரச்னைக்கு சுலபமான ஒரு பதிலும் சொல்லி விடலாம். பல வருஷங்களுக்கு முன்பு, நீங்கள் ஏன் அதிகம் எழுதுவதில்லை என்று கேட்கப்பட்ட போது ந. பிச்சமூர்த்தி சொன்னார்: இலக்கியம் படைக்கிறவன் கலைஞன். கலைஞன், தன் இஷ்டம்போல், தனக்கு உற்சாகம் வந்த போது தான் எழுதுவான். வெகு காலம் எழுதாமலும் இருப்பான் குயில் உற்சாகத்தோடு அற்புதமாகப் பாடுகிறது. அதுவாக தனக்கு இஷ்டம் எழுகிறபோது தானே பாடுகிறது? நமக்குத் தேவைப்படுகிற போதெல்லாம் குயிலைப் பாடு

என்று சொல்ல முடியுமா? பிறர் கட்டாயப் படுத்துகிறார்களே என்று அது பாடுமா? மழை பெய்கிறது. அது தன் இஷ்டத்துக்குத் தானே பெய்கிறது? கலைஞனும் அப்படித்தானே!

அடிக்கடி சிறுகதை தேவை என்று பத்திரிகைக்காரர்கள் கோரியபோது, கு. ப. ராஜகோபாலன் எழுதினார் 'நான் சிறுகதை யந்திரம் இல்லையே பத்திரிகைகளுக்குத் தேவை ஏற்படுகிற போதெல்லாம் கதை எழுதிக் குவிப்பதற்கு!' என்று. 'எழுத எழுச்சி வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்.

'எழுதுகிறவனுக்கு எழுத எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை உண்டு அவன் எழுதாமல் இருப்பதற்கும் எழுதுவதும் எழுதாமல் இருப்பதும் அவன் இஷ்டம். நீ ஏன் எழுதுகிறாய் என்றோ, நீ ஏன் எழுதாமல் இருக்கிறாய் என்றோ அவனை யாரும் கேட்கக் கூடாது. யாராவது அப்படிக் கேட்டால், அதற்கு அவன் பதில் சொல்லியாக வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது!' இப்படிச் சொன்னார் கவிஞர் ச. து. சு. யோகியார்.

இதெல்லாம் பிரச்னைக்கு ஏதோ பதில் என்றாகுமே தவிர,—பிரச்னையை தட்டிக் கழிக்கிற, ஒதுக்கி விடுகிற, அல்லது மண்டையிலடித்து உட்கார வைக்கிற பதிலாக இருக்க முடியுமே தவிர – சிந்தனாபூர்வமாய் பொருந்துகிற சரியான பதிலாக அமையாது என்றே நான் நினைக்கிறேன்.

இந்த விதமான மனோபாவத்தை மேற்கொள்கிற படைப்பாளி எளிதில் சோம்பேறி ஆகிவிடுவதற்கு வாய்ப்பு உண்டு. 'எழுத எழுச்சி ('மூட்') இல்லை' என்று சொல்லியும், 'எனக்கு இப்போ எழுத மனம் இல்லை' என்று பொழுது போக்கியும் சோம்பித் திரிவது சகஜமாகிவிடக் கூடும். சோம்பல் கலைஞனின் சுபாவம், கலைஞனுக்கு அத்தியாவசியமானதும் கூட என்றும் வாதாட முடியும். சாமர்செட் மாம் இதை அழகாகக் கூறியிருக்கிறார் 'எழுத்தாளன் சும்மா இருந்தும், படுத்துக் கிடந்தும், ஊர் சுற்றியும், சோம்பியிருந்தும் பொழுது போக்கலாம். அப்போதெல்லாம் அவன் வீணாகக் காலக்கொலை செய்கிறான் என்று நினைத்துவிடக் கூடாது. அவன் தனது தொழிலுக்குத் தேவையான காரியங்களைத் தான் அப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறான்' என்று அவர் சொல்கிறார்.

சரி, இந்தவிதமான சமாதானங்களை 'சும்மா அந்தச் சமயத்துக்குச் சொல்லும் சாமர்த்தியமான பதில்கள்' என்று ஒதுக்கிவைத்து விடுவோம்; படைப்பு இலக்கியம் நம் நாட்டில் ஏன் திருப்திகரமான வளர்ச்சியைப் பெறவில்லை; படைப்பாளிகள் ஏன் சோர்ந்து போய் விட்டார்கள் என்கிற முக்கிய கேள்விகளுக்கு நியாயமான விடை காண முயலுவோம்.

(அடுத்த இதழில்)

# குறிப்புகள்

சென்ற ஏட்டில் கவி ஏ. கே. ராமானுஜனை (ராமானுஜம் இல்லை) அறிமுகப்படுத்துகையில் தாய்மொழி கன்னடம் என்று எழுதி இருந்தோம். அது தவறு. அவர் தமிழரே. தமிழர் ஒருவர் சிகாகோவில் இருந்து தமிழ்ப்பணி செய்வது நமக்கு இன்னும் அதிக மகிழ்ச்சி. சென்ற மாதம் ராமானுஜன் எழுத்தாளர்கள் அளவளாவு கூட்டங்கள் இரண்டில் கலந்து கொண்டார். எழுத்து காரியாலயத்தில் சி. மணி, எஸ். வைதீஸ்வரன், ஆர். வெங்கடேசன், ந. முத்துசாமி வி. து. சீனிவாசன், தர்மூ சிவராமூ, சு. சங்கரசுப்ரமண்யன், கி. அ. சச்சிதாநந்தம்; சி. சு. செல்லப்பா ஆகியோர் கலந்து கொண்ட சந்திப்பில் தமிழ் புதுக் கவிதை மொழிபெயர்ப்பு சம்பந்தமாக ஆழ்ந்த கருத்துப் பரிமாறுதல் கூட்டம் நடந்தது. அடுத்து தி. ஜானகிராமன் வீட்டில் தி. ஜ. ர., சிட்டி, லா. ச. ரா. அழகிரிசாமி, ஷண்முகசுந்தரம், தி. க. சி., ஆகியோரை சந்தித்த கூட்டத்தில் தமிழில் சோதனை முயற்சிகள் பற்றி உரையாடல் இருந்தது. தென்மொழிகள் மொழிபெயர்ப்பாளர் கில்ட் சார்பாக மு. வரதராசனார் தலைமை வகித்த கூட்டத்தில் ராமானுஜன் சங்க கவிதைகளை தான் மொழி பெயர்த்த அனுபவத்தை கூறி, மொழி பெயர்ப்பு பிரச்னைகளை விளக்கி, தன் மொழி பெயர்ப்புகளை படித்துக் காட்டி மூலத்துடன் ஒப்பிட்டுக் காட்டிப் பேசினார். இந்த பேச்சு குறிப்பிடத்தக்கதாகும். சென்ற மாதக் கடைசியில் ராமானுஜன் சிகாகோவுக்கு புறப்பட்டுச்சென்றார்.

இந்த ஏட்டில் ராமானுஜன் கவிதைகள் மூன்றின் ('ஸ்டிரைடர்ஸ் தொகுப்பிலிருந்து) மொழி பெயர்ப்புகள் வெளியாகி இருக்கின்றன. அவரோடு சேர்ந்து வைதீஸ்வரன், சச்சிதாநந்தம், சி. சு. செ. மூவரும் செய்த மொழிபெயர்ப்பு.

பிரபல கேரள கவியான எடசேரி கோவிந்த நாயருக்கு சென்னையில் சிறந்த வரவேற்பு கூட்டம் நடந்தது. அவரது கவித்திறமையை பாராட்டிப் பலர் பேசினார்கள். கவி பதிலளித்தார். லலிதா கலா அகாடமி செயலாளர் ஓவியர் எம். வீ. தேவர் ஏற்பாடு செய்தவர் அன்று காலை எடசேரியின் கவிதைகளை விமர்சித்த ஒரு கருத்தரங்கம் அவர் முன்னிலையில் நடந்தது.

இலக்கிய சங்கம் கூட்டம் இரண்டில் ஒன்று ஜெர்மன் நாவலாசிரியர் ஹென்ரிஷ் ப்யோல், சிறுகதாசிரியர் வொல்ஃப்கங் போர்ஷெர்ட் இருவரையும் பற்றியது. மற்றது சாகித்ய அகாடமி பரிசு நூல்கள் பற்றியது.

செங்கல்பட்டு இலக்கிய வட்டம் சார்பில் மலையாள இலக்கியம் பற்றி ஆர். சௌரிராஜன் சொற்பொழிவு கூட்டம் நடந்தது. இந்த மாதம் 23ம் தேதி, கு.ப.ரா. நினைவுக் கூட்டம் நடக்கும்.

திருத்தம்

சென்ற ஏட்டில் எழுத்தாளர் சங்க செயற்குழு தேர்தல் பற்றிய வரிகளில் செயலாளர், மா. சு. சம்பந்தன் என்று இருந்திருக்க வேண்டும். மற்ற இருவரும் உதவிச் செயலாளர்கள்.

# எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்) | ந. பிச்சமூர்த்தி | ரூ. | 4-00 |
| 2. வழித்துணை (கவிதைகள்) | ,, | ரூ | 2-00 |
| 3. அகல்யை (ஓரங்க நாடகங்கள்) | கு. ப. ரா. | ரூ. | 4-00 |
| 4. ஆண்சிங்கம் (சிறுகதை) | வல்லிக்கண்ணன் | ரூ. | 4 00 |
| 5. சில விஷயங்கள் (கட்டுரைகள்) | சிட்டி | ரூ. | 3-00 |
| 6. சத்யாக்ரகி (சிறுகதைகள்) | சி. சு. செல்லப்பா | ரூ. | 4-00 |
| 7. வாடி வாசல் (நாவல்) | ,, | ரூ. | 4-00 |
| 8. கோடை வயல் (கவிதைகள்) | தி. சோ. வேணுகோபாலன் | ரூ. | 1-25 |
| 9. கனவுப் பறவை (சிறுகதைகள்) | கர்ணன் | ரூ. | 2-50 |
| 10. புதிய பாதை (நாடகம்) | கோமல் சுவாமிநாதன் | ரூ. | 3-00 |

கிடைக்குமிடம் :

**எழுத்து பிரசுரம்**

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

**EZHUTTHU**

**TAMIL LITERARY MONTHLY**

**Subscription Rates**

| | |
|---|---|
| Annual | Rs. 6/- |
| Three Years | Rs. 15/- |
| Foreign Annual | Rs. 8/- |
| Three Years | Rs. 20/- |
| Single Copy | 50 pisae |

Published every first of the English month.

Ad: EZHUTTHU
19-A. Pilliarkoil Street,
Madras-5

**EZHUTTHU**

**TAMIL LITERARY MONTHLY**

**Advertisement Tariff**

**Inside Page**

| | |
|---|---|
| Full Page 15×20 cms | Rs. 80/- |
| Half ,, 15×10 / 7½×20 | Rs. 40/- |
| Quarter Page 7½×10 / 15×5 | Rs. 20/- |
| Back Cover | Rs. 100/- |
| Inside Cover | Rs. 90/- |

EZHUTTHU
19-A. Piliarkoil St.,
Madras-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19.A, Pilliar Koil Street, Madras-5
Printed by M, Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5